Registered as a Newspaper

பக்கங்கள்: எட்டு

கண்வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக கொடுப்பவர்கள்
எஸ்.எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி
அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை
ரூ 2/50

S. M. Fernando
OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
580, HOSPITAL ROAD.
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்: 4 சுக்கில ஆவணி மீ 29 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 13 (14 09 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY சுதிர்: 243

## ஐ. நா. உயர் ஸ்தானிகராலய சிரேஷ்ட அதிகாரி விஜயம்

யாழ்ப்பாணம்: செப், 14
ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் சிரேஷ்ட திட்ட அலுவலர் திரு: பௌரிஸ்ராடானினோ நேற்று யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டார்:

இவர் நேற்று யாழ் அரச அதிபர், மற்றும் செயலக அதிகாரிகள், கல்வித் திணைக்களம்: வீடமைப்பு அதிகாரசபை. சிநோர் ஆகியவற்றின் அதிகாரிகளை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

1988 89 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் பற்றியும் 1989–90இல் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் பற்றியும் அவர் விரிவாக ஆராய்ந்தார்;

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் 1988இல் முறைசாரா கல்வி நெறியில் பயிற்சி முடித்து வெளியேறிய ஆயிரத்து 25 மாணவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் தொழில் வாய்ப்பு ஏற்படுத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உருத்திரபுரம் சுற்றி வளைப்பு

கிளிநொச்சி உருத்திரபுரப் பகுதி நேற்று மதியம் 12 மணியளவில் சுற்றி வளைக்கப் பட்டு பலத்த தேடுதல் மேற்கொள்ளப் பட்டது.

பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக தடுத்து வைக்கப் பட்டனர்: இச்செய்தி எழுதும்வரை கைது செய்யப் பட்டவர்கள் விடுவிக்கப் படவில்லை: இதே வேளை இந்தப் பகுதியில் ஷெல் தாக்குதல்களும் மேற் கொள்ளப் பட்டன. [தி -79]

## மின்சாரம் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம் செப் 14
சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து நேற்று சுழற்சி முறை மின்சாரம்வழங்கப் பட்டது: [இ: 10]

## சந்நிதியில் இன்றுதேர்

யாழ்ப்பாணம், செப். 14
சரித்திரப் பிரசித்திபெற்ற தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா நடைபெறுகிறது;

கந்தப்பெருமான் இன்று காலை 8 மணிக்கு தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலிப்பார்;

இன்றைய தேர்த் திருவிழாவை ஒட்டி விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன;

நாளை வெள்ளிக் கிழமை காலை 7-45 மணிக்கு தீர்த்த உற்சவம் நடைபெறும்;

(சிறப்பிதழ் உள்ளே)

(அ-160)

## வல்லைவயில் பதற்றம்

வல்வெட்டித்துறை, செப். 14
வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்றுக் காலை 8-30 மணியளவில் பெரும் பதற்றம் நிலவியது: அப்பகுதியில் படையினரின் தேடுதல் வேட்டையும் இடம்பெற்றது: (உ-160)

## பெண் மரணம்

யாழ்ப்பாணம், செப். 14
அலரிக் கொட்டையைச் சாப்பிட்டதாகக் கூறப்படும் இளம் பெண் ஒருவர் நேற்று மரணமானார்.

கொட்டடியைச் சேர்ந்த சே; நாகேஸ்வரி (வயது 28) என்ற பெண்ணே மரணமானவராவார்: (உ-10)

## கல்வியைத் தொடர விரும்பும்

# பாடசாலை மாணவர் விடுவிக்கப்படுவர்!

### நேற்றைய மாநாட்டில் உறுதி

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 14

✶ கல்வி பயிலும் மாணவர் எவரும் கட்டாயத்தின்பேரில் பயிற்சிக்குக் கொண்டு செல்லப்படமாட்டார்கள்.

✶ ஏற்கனவே பயிற்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் கல்வியைத் தொடர விரும்பினால் பெற்றோர்கள், மற்றும் யாழ், மாவட்ட பாடசாலை அபிவிருத்திச் சங்க சம்மேளனப் பிரதிநிதிகள் முன்னிலையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விடுவிக்கப்படுவர்.

—இவ்வாறு பாடசாலைகளைச் சுமுகமாக இயங்கச் செய்வது குறித்து நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் உறுதி அளிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலுக்கு யாழ் மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு: ஆ: முருகநேசன் தலைமை வகித்தார்;

யாழ் அரசாங்க அதிபரின் பிரதிநிதி ஒருவர் அமைதிப் படையின் பதில் நகரக் கொமாண்டர் கேணல் விஸ்வநாதன், பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி, பாடசாலை அபிவிருத்திச்சங்கம், அதிபர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள் ஆகியோரின் பிரதிநிதிகள், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் திரு; இளங்கோ, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் சார்பில் திரு சந்திரன், ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணி சார்பில் திரு: டொமினிக் ஆகியோர் கலந்துகொண்டனர்:

இந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப் பட்டன:

★ கல்விகற்கும் எந்த ஒரு மாணவரும் கட்டாயத்தின் பேரில் பயிற்சிக்குக் கொண்டு செல்லப்படமாட்டார்கள்,

★ அமைதிக்கும், ஜனநாயகத்திற்கும் விரோதமான செயல்களில் ஈடுபடுபவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்படுபவர்கள் சந்தேகம் நிவர்த்தியாகும் பட்சத்தில் விடுவிக்கப் படுவர்.

★ ஏற்கனவே பயிற்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் கல்வியைத் தொடர விரும்புவோர் அவர்களின் விருப்பத்தின்பிரகாரம் பெற்றோர்கள், யாழ் மாவட்ட பாடசாலை அபிவிருத்திச் சங்க சம்மேளனப் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் எதிர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



சர்வ கட்சிகளும் ஜோராய் தான் ஆரம்பிக்கினம்......... பேசப் பேசத்தான் விசயம் வெளியில வரும் கண்டியளோ.........!

## மீண்டும் தமிழகம் நோக்கி ஈழத் தமிழ் அகதிகள்!

இராமநாதபுரம், செப் 14
கடந்த நான்கு தினங்களில் பதினொரு குடும்பங்களைச் சேர்ந்த 34 இலங்கைத் தமிழர் இராமநாதபுரத்திற்கு படகில் அகதிகளாகச் சென்றனர் என்று 'இந்து' செய்தி வெளியிட்டுள்ளது;

இவர்களை அகதிகளாகக் கணித்து நடத்துவதா? அல்லது இந்திய கடவுச்சீட்டுச் சட்டவிதிகளை மீறியவர்களாகக் கருதி நடத்துவதா?— என்பதுபற்றி இந்திய அரசின் முடிவை இராமநாதபுர புனர்வாழ்வுத் திணைக்கள அதிகாரிகள் எதிர்பார்த்துள்ளனர்:

இதேசமயம் கடந்த சனிக்கிழமை இராமநாதபுரத்தைச் சென்றடைந்த வேறு 29 இலங்கைத் தமிழரில் ஐந்துபேருக்கு பின்னர் என்ன நடந்தது என்பதுபற்றிய விவரங்கள் தெரியாதிருப்பதாக அறிவிக்கப்படுகிறது; (உ-17)

## ஓட முயன்றவர் மீது சூடு!

யாழ்ப்பாணம், செப். 14
உருத்திரபுரம் பகுதியில் நேற்று நண்பகல் 11 மணியளவில் படையினரைக் கண்டு ஓட முயற்சித்ததாகக் கூறப்படும் ஒருவரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பட்டது.

இந்தச் சம்பவத்தில் காயமுற்ற கணபதிப்பிள்ளை கதிரவேலு (வயது 60) என்பவர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்: (உ-9)

## விபத்தில் சிக்கியவர் மரணம்!

சாவகச்சேரிபகுதியில்நேற்று முன்தினம் இடம்பெற்ற சைக்கிள் லொறி விபத்தில் சிக்கி படுகாயமுற்றஇளைஞர் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

உயிரிழந்த இளைஞர் சிவகுருநாதன் வாசுதேவன் (வயது 22) என்பவராவார்; [உ 10]

## சூட்டுக்கு இலக்கானவர் மரணம்!

யாழ்ப்பாணம் செப் 14
கடந்த முதலாம்திகதியன்று யாழ் ஆஸ்பத்திப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான திருநெல்வேலியைச் சேர்ந்த பி' பத்மசேகரம் [வயது 24] என்ற இளைஞர் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணைகள் யாழ் பொலீஸ் பகுதியில் நேற்று இடம்பெற்றது; [உ 9 10]

## தாக்குதலில் 3 பொலீஸார் பலி

குருநாகல் கல்தாவ பகுதியில் ஜீப்பில் ரோந்து சென்ற பொலீஸார் மீது இனந்தெரியாதோர் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் 3 பொலீஸார் உயிரிழந்தனர். 2 பேர் காயமடைந்தனர்.

செவ்வாய்க்கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது: (உ-1)

## சித்திவிநாயகர் ரதோற்சவம்

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத் தேர்த் திருவிழா இன்று காலை சிறப்பாக நடைபெற உள்ளது;

விநாயகப்பெருமான் தேரில் இவர்ந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

(சிறப்பிதழ் உள்ளே)

# தெற்கில் மீண்டும் வன்செயல்கள்!

கொழும்பு, செப். 14
தென்னிலங்கையில் கடந்த பத்து நாட்களாக ஓரளவு தணிந்திருந்த வன்செயல்கள் மீண்டும் தலைதூக்கியிருக்கின்றன;

மொனறாகலை மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மட்டும் இனந்தெரியாத நபர்களால் ஐந்து தபாற் கந்தோர்களும் 22 உப தபாற் கந்தோர்களும் எரிக்கப்பட்டன,

தென் மாகாணத்தில் 14 உபதபாற்கந்தோர்கள் இனந்தெரியாத நபர்களால் கொள்ளையிடப்பட்டன;

10 அரசு பஸ்கள் எரிக்கப் பட்டன:

ஏனைய சில வன்செயல் சம்பவங்கள் வருமாறு:-

★ இலங்கை இராணுவப் பொலிசைச் சேர்ந்த கப்டன் எம்; பெரேரா செவ்வாய்க்கிழமை மாலை இரத்மலானையில் அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்,

★ இன்னொரு சம்பவத்தில் வீடு திரும்பிக்கொண்டிருந்த மார்க்பெட் இயக்குநர் ஹென்றி பெரேரா ஆமர் வீதிக்கு அருகில் கிராண்ட்பாஸ் தெருவில் செவ்வாய்க்கிழமை மாலை இனந்தெரியாத ஒருவரால் சுட்டுக்கொல்லப் பட்டார்;

★ ஆங்கிலோ—ஆசியன் தொழிற்சாலையின் முகாமையாளர் ஆர். எஸ்; பெரேரா கடந்த திங்கட்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ கடுகண்ணாவையில் மின் கம்பங்களிலும் மரங்களிலும் கட்டப்பட்டிருந்த ஆறு சடலங்களை பாதுகாப்பு அதிகாரிகள் கண்டெடுத்தனர்: கடந்த வெள்ளிக்கிழமைதான் இப் பகுதியில் ஒரு பாலத்தில் கீழ் 30இளைஞர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

★ அக்குரஸ்ஸவில் உள்ள துணை அமைச்சர் தயானந்த விக்கி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அனைத்துக்கட்சி மாநாடு ஆரம்பம்

கொழும்பு, செப் 14
அனைத்துக்கட்சிகள் மாநாடு நேற்றுக்காலை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது;

அழைக்கப்பட்ட 27 கட்சிகள் மற்றும் குழுக்களில், 21 கட்சிகள், குழுக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் நேற்றைய மாநாட்டில் பங்குபற்றினர்:

நேற்று நடைபெற்ற மாநாட்டின் ஆரம்ப நிகழ்ச்சிகளுக்கு ஜனாதிபதி திரு. ஆர்: பிரேமதாச தலைமை வகித்தார்.

நேற்று நடைபெற்ற மாநாட்டின் ஆரம்ப நிகழ்ச்சிகளை அடுத்து பல்வேறு கட்சிகளும் சமர்ப்பித்துள்ள யோசனைகள் குறித்து ஆராய்வதற்காக தனித்தனியாக கலந்துரையாடல் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளது:

இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை (18ஆம் திகதி) முதல் தொடர்ந்து பத்து தினங்களுக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மாநாட்டில் பங்குபற்றிய கட்சிப் பிரதிநிதிகள்!

கொழும்பு, செப் 14
நேற்று ஆரம்பமான அனைத்துக் கட்சி மாநாட்டில் 21 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 71 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்:

பங்குபற்றியோர் விவரம் வருமாறு:-

★ ஐக்கிய தேசிய கட்சி:- அமைச்சர்கள் சாகுல் ஹமீத், லலித் அத்துலத்முதலி, விஜேகென்ட பெரேரா, ரஞ்சன் விஜேரத்ன, பெஸ்டஸ் பெரேரா, சிறிசேன கூரே, காமினி திஸாநாயக்கா மற்றும் ஏ. ஜே. ரணசிங்க;

★ ஸ்ரீ ல. சு. கட்சி:— சிறிமாவோ பண்டாரநாயக்கா, மைத்திரிபால சேனநாயக்கா, ஸ்டான்லி திலகரத்ன, ஜே. ஆர். பி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் குண்டு வெடிப்பு!

கொழும்பு செப் 14
கொழும்பு நகரில் நேற்று குண்டு வெடித்தது:

அனைத்துக் கட்சி மாநாடு ஆரம்பமாவதற்கு முக்கால் மணி நேரத்திற்கு முன்னர் இச்சம்பவம் இடம் பெற்றது: பெரும் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை; [உ ஏ]

## சுபநேரம்

14 – 09 – 1989
ஆவணி 29 வியாழக்கிழமை
நக்ஷத்திரம்: சதயம்
சுபநேரம்:
07-33 முதல் 09-03 வரை
ராகுகாலம்:
01-33 முதல் 03-03 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# உணவு முத்திரைமூலம் பொருள்கள் விநியோகிப்பது இடைநிறுத்தம்?

## கூட்டுறவுச் சங்கங்கள் நிதி நெருக்கடியில்

யாழ்ப்பாணம், செப்: 14
யாழ்-மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் உணவு முத்திரைக்கு பொருள்களை விநியோகிக்கும் வேலைகளை அடுத்த சில தினங்களில் இடைநிறுத்தி வைப்பதற்கு முடிவு செய்திருப்பதாக அறியவருகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதே இம் முடிவை மேற்கொள்வதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது:

கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ்-செயலகத்தினால் சுமார் 4 கோடி 50 லட்சம் ரூபாவரை நிலுவையாக வழங்கப்பட வேண்டியிருப்பதாகவும்—

இந்நிலையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் உதவி வழங்குவதை உணவுத் திணைக்களமும் நிறுத்தியிருக்கின்றது என்றும்—

இதனாலேயே கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது,

தற்போதைய நிலையைக் கவனத்தில்கொண்டு செயலகத்தினால் செலுத்தப்பட வேண்டிய நிலுவையை வெகுவிரைவாக திறைசேரியிலிருந்து பெற்றுத் தரும்படியும்—

(8 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டில் தேசிய ஒருமைப்பாடு

## உருவாகியிருப்பதாக ஜனாதிபதி தகவல்!

கொழும்பு, செப்; 14
தற்போது நாடு எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதில் தேசிய ஒருமைப்பாடு உருவாகியிருக்கிறது:

— நேற்று ஆரம்பமான அனைத்துக்கட்சி மாநாட்டின் போது உரை நிகழ்த்துகையில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா இப்படித் தெரிவித்தார்;

மாநாட்டில் கலந்து கொண்ட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளை வரவேற்று ஜனாதிபதி பிரேமதாஸ பேசினார்;

அவர் கூறியதாவது:-

தற்போதைய நெருக்கடிக்கு நடைமுறைச் சாத்தியமும் ஆக்கபூர்வமுள்ள தீர்வைக் காண்பதற்கு மேற்கொள்ளப் படும் கூட்டு முயற்சியாக இந்த மாநாடு அமைகிறது.

இந்த முயற்சியில் நாம் அரசியல் லாபத்தை ஈட்ட முற்படாமல், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய வகையில், விசுவாசமாகவும் பரஸ்பர நம்பிக்கை - புரிந்துணர்வுடனும் செயற்படவேண்டும்.

இந்தப் பேச்சுக்களில் முழு நாட்டவரும் பங்குபற்றுவது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன்:

சமாதானத்தை மீண்டும் நிலைநாட்ட, சம்பந்தப்பட்ட சகல பிரச்சினைகளும் நன்கு ஆராயப்படும்.

தற்போது எதிர்நோக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

இருபாலை கிழக்கு பிரதான வீதியில் 2 பரப்பு 1 குளி வீடு கட்டக்கூடிய [illegible] நிலக் காணி விற்பனைக்கு உண்டு தொடர்பு: சி. [illegible] சபாபதி பாடசாலை வீதி. இருபாலை (2138)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books), அதிநவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer-Books), கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்; மணிமேகலை ரேடர் (புத்தகசாலை) இல:01 பஸ் நிலையம், யாழ்ப்பாணம்; (1551)

மன்னார் ஆஸ்பத்திரிச் சந்தி ஸ்ரேசன் றோட்டில் 4 பரப்புக் காணியும் அதில் அடங்கிய வீடும் விற்பனைக்கு உண்டு; இல 600, C/o, Uthayan. (2317)

**செங்கமாரி**

சிறுநீர் மஞ்சளாகவோ, சிவந்தோ போனால் செங்கமாரி ஈரலைப் பாதிக்கும். எந்நிலையிலும் குணப்படுத்தலாம். வாதம் வலி, குன்மம், குஷ்க வயு, சிரங்கு, காமாலை நோய்களிலும் திறமைபெற்ற வர் வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம். வேலணை; (1845)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

கறுப்பு (பிளிமத்) சேவல், சிவப்பு சேவல், குஞ்சுகள் 16 ஆம் திகதி சனியும், 18 ஆம் திகதி திங்களும், ஹைலைன் (Hyline) சிவப்பு, வெள்ளை கறுப்பு பேடுக் குஞ்சுகள் 19ஆம் திகதி செவ்வாய்க் கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. தொடர்பு: S. T. R அக்சஸ், மாஸ்கடை, திருநெல்வேலிச்சந்தி. (2318)

தூய இன HYLINE முட்டைப்பேட்டுக்குஞ்சு 18/ 9/ 89 உம் GOLDEN COMET பிறவுண்பேடு CHRISTOMBU புறொயிலர் 24/ 9/ 89உம் விநியோகிக்கப்படும். பதிவு செய்க யாழ்ப்பாண கால்நடை வளர்ப்போர் சங்கம் கன்னாதிட்டி (பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் காரியாலயம்) கன்னாதம். (1940)

**கோழிக்குஞ்சுகள் விற்பனை**

Hyline சிவப்பு, வெள்ளை, பேடு அதி சிறந்த Sekline பேடு புரொயிலர் Dekalb ஒரு நாள் ஒரு வாரக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். முன் கட்டியே பதியவும்; P. பத்மநாதன் மாரீசன் கூடல், (சந்திக் கருகில்) இளவாலை; (2106)

**தேவை**

கிளிநொச்சிப் பகுதியில் தனியார் ஸ்தாபனத்திற்கு அனுபவமிக்க மின் இணைப்பாளர்கள், மின்மோட்டார் வைன்டேஸ், வெல்டேஸ் உடன் தேவை. திறமைக்கேற்ப சம்பளம், இடவசதி வழங்கப்படும் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்; செ: செல்வரத்தினம், பொறுப்பாளர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், பரந்தன்; (2302)

**தவறிவிட்டது**

க. செல்வராணி ஆகிய எனது 617302810 V இலக்க அடையாள அட்டையும், வைத்தியசாலை பதிவுகளும் 12-9-89 750 இலக்க வானில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும்; (2335)

**Typewriter**

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்; Fudo Enterprises 89/17, மின்சார நிலைய வீதி, 1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்; (சி 3601)

**ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்காக**

PAPER CLASS கணிதம் -V.T ராஜேந்திரா, தமிழ் —R. மருதலிங்கம் ஆரம்பம் 14- 9- 89 வியழன் காலை 9 மணி. ஸ்ரார் (ஸ்ரான்லி கல்லூரி அருகில்) நாவலர் வீதி அரியாலை. (2147)

# இலங்கை வங்கி பொன்விழா கட்டுரைப் போட்டி முடிவுகள்

## நாளை பரிசளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம், செப் 14

இலங்கை வங்கியின் பொன் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியின் யாழ் மாவட்ட ரீதியிலான முடிவுகள் வருமாறு!

தமிழ் மொழியிலான போட்டி முடிவுகள்!

முதலாமிடம்! செல்வி பிரகாசா அந்தோனியோசப் யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்;

இரண்டாமிடம்! செல்வி ஏ. எஸ். சுகந்தி மானிப்பாய் மகளிர் கல்லூரி;

மூன்றுமிடம்! செல்வன் பொன்னம்பலம் நக்கீரன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி;

ஆங்கில மொழியிலான போட்டி முடிவுகள்!

முதலாமிடம் செல்வி வாசுகி சின்னையா வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி;

இரண்டாமிடம்! செல்வன் நடேசன் சுதர்சன் யாழ்; பரியோவான் கல்லூரி.

மூன்றுமிடம்! செல்வன் என். சூரியராஜா சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நாளை வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்: திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நடைபெறும்;

பரிசு பெறுவோருக்கான அழைப்பிதழ்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டு விட்டன என்று வங்கி நிர்வாகம் தெரிவித்தது. (இ-த)

# நெல்லியடியில்.....

ECO/ க. கலாகரன்
ACC/ S K. பிரபாகரன்

★ 89, 90 வகுப்புக்களுக்குரிய மாணவர்கள் வருகை தரவும்;

15. 09. 1989 Fri 11.00 a. m.


தொடர்பு:-

**MATHS CENTRE**

★ நேர அட்டவணையைப் பெறவும்;
C/o: SIVAKEE INSTITUTE.

(C/3674)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு!
1937- 05- 12

● ★ ●

இறப்பு!
987- 09 14

**திரு. மனவல் றொபட்ஸ்**
(அருமநாயகம்)

ஒன்றாய் மகிழ்ந்திருந்த
ஓரணியாய் வளர்கையிலே
நன்றாய் வாழ்வோமென
யாம் மகிழ்வு கொள்கையிலே
நடுநிசியில் நீர் பிரிந்த
நாள் இன்று வருகுதையா!
ஆண்டிரண்டு கடந்திடலாம்
கொண்ட அன்பு நினைவு மாறுது!

57, பாவுடையார் வீதி, யாழ்ப்பாணம்; — மனைவி, மக்கள். (2336)

# இன்றும் நாளையும்

அரியாலையூர் சித்தி விநாயகர் மகோற்சவத்தை முன்னிட்டு திரு. சுப்பிரமணியசுந்தரம் நிகழ்த்திவரும் சங்கீத கதாப்பிரசங்கத்தில்-

இன்று பிற்பகல் 1 மணிக்கு காரைக்காலம்மையார் என்னும் பொருள்பற்றியும், நாளை மாலை 3 மணிக்கு சண்டேஸ்வர நாயனார் என்னும் பொருள்பற்றியும், உரை நிகழ்த்தப்படும்.

இன்றைய நிகழ்ச்சியில் திரு: சுப கணேசசுந்தரத்தை திரு: க. சொக்கலிங்கம்(சொக்கன்) பொன்னாடைபோர்த்திகௌரவிப்பார். நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்;

இன்று நல்லை ஆதீனஓதுவார் மூர்த்தியின் பண்ணிசையும் நாளை ஆசிரியைசெல்வி பி. கிருஷ்ணவேனியின் மாணவர்களின் பண்ணிசையும் இடம்பெறும்;

# மணவாளக் கோலம்

யாழ்ப்பாணம், செப் 14

தெல்லிப்பழை கிழக்கு கிழானை கன்னகை அம்பாள் ஆலய மணவாளக் கோலத் திருவிழா இன்று வியாழக் கிழமை 14 ஆம் திகதி நடைபெறுகிறது;

விசேட அபிஷேகம் பூசை என்பவற்றுடன் மாலையில் அம்பாள் வீதியுலா வருவார்; நண்பகலில் அன்னதானம் வழங்கப்படும்; (அ)

# கும்பாபிஷேக உற்சவம்

மாவை கொல்லங்கலட்டி சடச்சப்பை ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேக உற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகிறது;

மாலை 3 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகும் பன்னிரண்டு தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெறும்; (த)

# நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார்

யாழ்ப்பாணம், செப் 14

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழா இன்று வியாழக் கிழமையும், தீர்த்தத்திருவிழா நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறும். (உ)

# விஷேச கூட்டம்

யாழ்ப்பாணம் செப் 14

காங்கேசன்துறை மாவட்டச் சாரணத் தலைவர்களுக்கான விசேஷ கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைமாலை 3 மணிக்கு மாவை கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெறும். (த)

# ரயில்வே திணைக்கள கொடுப்பனவு

கொழும்பு செப் 14

இலங்கை ரயில்வே திணைக்களக் கொடுப்பனவு தவிர்க்க முடியாத காரணங்களினால் பின்போடப்பட்டுள்ளது;

இது எதிர்வரும்18ஆம்திகதி திங்கட்கிழமை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது; (த)

# ஆரம்ப கூட்டம்

யாழ்ப்பாணம், செப் 14

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் உலக உயிர்ப் பாதுகாப்பு வார ஆரம்பக்கூட்டம் இன்று வியாழக்கிழமை நல்லை ஆதீனத்தில் காலை 9 மணிக்கு ஆதீன முதல்வர் தலைமையில் நடைபெறும்;

அக்டோபர் 30 ஆம் திகதி முதல் நவம்பர் 4 ஆம் திகதி வரை உலக உயிர்ப் பாதுகாப்பு வாரம் அனுஷ்டிக்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது. (த)


★ COMPUTER COURSES ★

Diploma in Basic programming & Data Processing

புதிய பிரிவுகள்:

15 — 09 — 1989 (பிரிவு - I)
16 — 09 — 1989 (Module - III)
18 — 09 — 1989 (பிரிவு - II)

நேரம்: 9 00 a.m. இல் ஆரம்பமாகும்

I.D.P. COMPUTER CENTRE

342, K. K. S Road, JAFFNA.

Branch: 7th Mile Post, Mallakam;

(சி-3669)


உ

# நன்றியும் அழைப்பும்



அமரர்

**திருமதி விநாசித்தம்பி அன்னம்**
(அளவெட்டி)

எமது அன்புச் செல்வர்களே,

தாங்கள் எமது தர்மபத்தினி அன்னம் அவர்களின் அமரத்துவ சமாதிக்கிரியையின் போதும், அடுத்து வந்த தினங்களிலும் சமுகந்தந்தும் - அனுதாபச் செய்தி அனுப்பியும் எமக்கு மனச்சாந்திதந்தீர்கள் - உங்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தாரின் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துகொள்கின்றோம்;

● ● ●

17.9.89 ஞாயிற்றுக்கிழமை பகல் 10மணி தொடக்கம் 1 மணிவரை நிகழவிருக்கும் அன்னாரின் மோட்ச தீபாரதனை வைபவத்தின் போதும் சமுகந்தந்து பங்குபற்றும் வண்ணம் - உறவினர் - நண்பர்கள் - அன்பர்கள் அனைவரையும் மிக்க பணிவன்புடன் வேண்டி நிற்கின்றோம்;

இங்ஙனம்:
தங்கள் நல்வரவை விரும்பும்;
அருட்கவி சீ. விநாசித்தம்பியும்,
மக்கள், மருகர், பேரரும்;

நாகேஸ்வரம்,
அளவெட்டி;

(2160)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பும்



**திரு. வெங்கடாசலம் சுப்பிரமணியம்**
(ஓய்வு பெற்ற நிலஅளவை அத்தியட்சகர்)

தோற்றம்: 16 06- 1933



**திரு. சுப்பிரமணியம் அமுதன்**
(உரிமையாளர், 'மார்க்கண்டு' ஸ்ரோர்ஸ், வல்வெட்டித்துறை)

தோற்றம்: 11- 10- 1960

மறைவு 02- 08- 1989

''1989- 08- 02 அன்று அகால மரணமடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்குகளான திரு. வெ. சுப்பிரமணியம் திரு. சு. அமுதன் ஆகியோரது 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும், வல்வெட்டித்துறை. வித்தனை தெருவிலமைந்த எமது இல்லத்தில் 15- 9- 1989 (வெள்ளிக்கிழமை) அன்று நடைபெறும் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

அன்னார்களது இறுதிக் கிரியைகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்:
திருமதி இராஜேஸ்வரி சுப்பிரமணியம்,
செல்வன் சு. இராதன் மார்க்கண்டன்,
(மருத்துவ பீடம், கொழும்பு, பல்கலைக்கழகம்)
செல்வன் சு. இரகிதன் மார்க்கண்டன்.
(ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை);

இராஜேஸ்வரி வாசம்,
வித்தனை, வல்வெட்டித்துறை.

(2?86)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**வேலன் மார்க்கண்டு**

மலர்வு: 05- 10- 1935
உதிர்வு: 20- 08- 1986

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மார்க்கண்டு தங்கம்மா**

மலர்வு: 07- 06- 1940
உதிர்வு: 26- 08 -1987

திதி: 14- 09- 1989

ஆண்டுகள் மூன்று சென்றாலும் உங்கள் நினைவு எம் மனதை விட்டு என்றும் அகலாது

உங்கள் பிரிவால் வாடும்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் தெற்கு, - உரும்பிராய்; (2337)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்

பொருள்:

எம்மிடம் ஒரு பொருளும் இல்லை என்று எண்ணி வறுமையால் சோம்பியிருப்பவரைக் கண்டால் நிலமகள் தன்னுள் சிரிப்பாள்.

உதயன்

இல. 392/2, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24500, 23078

14 - 09 - 1989    பெட்டி இல: ..

# தீர்க்கதரிசனம் வேண்டும்

யாழ்ப்பாணம் சுன்னாகம் மகாவித்தியாலயத்தில் தாவரவியற் பூங்கா ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானம் பயிலும் மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவக்கூடிய ஒரு தீர்க்க தரிசனம் நிறைந்த முயற்சி என்று அதனைச் சொல்லலாம்.

தாவரவியல் ஓர் இயற்கை விஞ்ஞானப் பாடநெறி. தாவரங்கள் இயற்கைச் சூழலின் முன்னோடிகள். மனிதனின் உணவு முதல் மருந்துவரை தாவரங்களிலேயே பரவிப் படர்ந்து உள்ளன. ஆகையால் விஞ்ஞான அறிவு பெறுவதற்குத் தாவரவியல் அத்திவாரமாகிறது. சரியாகக் கூறுவதானால் மனிதனுக்கு உதவும் விஞ்ஞான அறிவைப் பெருக்குவதற்கு தாவரவியலும் தெரிந்திருக்க வேண்டியது அவசியம்.

தாவரவியல் பூங்கா என்றால் பேராதனைக்குத்தான் செல்லவேண்டும் என்ற நிலை மாறவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆகக்குறைந்தது ஒரு தாவரவியல் பூங்காவாவது உருவாக்கப்படவேண்டும்.

மாணவரின் விஞ்ஞானக் கல்வி விருத்திக்கு இயற்கையோடு ஒன்றிய செய்முறைக்கு முக்கியத்துவம் தரப்படவேண்டும். செவ்வரத்தையை நேரில் பார்க்காத மாணவனால் அதன் அமைப்பை விருத்தியை, வாழ்க்கையைச் சரியாகப் புரிந்துகொள்வது கடினம். தென்னையின் உச்சியில் இருந்து தேங்காய் விழுந்ததைப் பார்க்காத மாணவனால் புவியீர்ப்பின் தத்துவத்தை, பெறுபேற்றை, இயக்கத்தை உணரமுடியாது. இருவரும் தமக்கு ஏற்றமாதிரி விடயங்களைக் கற்பனை செய்துகொள்வார்கள்.

காதால்கேட்டு மனதால் இரசிப்பதோடு மட்டுமல்லாமல், சம்பந்தப்பட்டவற்றை நேரில் கண்ணால் பார்த்து மனதில் பதித்துக்கொள்வதும் விஞ்ஞான அறிவைப் பெருக்க அத்தியாவசியமாகிறது. விஞ்ஞானக் கல்வி என்றதும் கோட்பாட்டைப் போதிக்கும் விரிவுரையுடன் செய்முறையும் சேர்கிறது. செய்முறை விஞ்ஞானக் கல்வியின் ஒருமுக்கிய அங்கமாகிறது.

அதன்பொருட்டே, செய்முறைப் பரீட்சையில் சித்தியடைந்தால்தான் குறிப்பிட்ட விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்ததாக முன்னர் அங்கீகரிக்கப்பட்டது. இப்போது செய்முறைப் பயிற்சிக்கு அளிக்கப்பட்டு வந்த முக்கியத்துவம் மறக்கப்பட்டு, வெறும் கோட்பாட்டுப் படிப்பாகவே போதனை உள்ளது.

விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் துரித வளர்ச்சி கண்டு, மனித வாழ்க்கையின் பல அங்கங்களிலும் பெரும் பங்கு எடுத்துவரும் இந்த யுகத்தில் செய்முறைப்பயிற்சி இல்லாத விஞ்ஞானக் கல்வி உயிர் இல்லாத உடம்பு போன்றதாகும். இது எதிர்காலத்தில் பெரும் பாதிப்பைக் கொண்டு வரும். நாட்டு வளர்ச்சிக்குக் குந்தகமாக அமையும்.

அந்தந்தப் பிரதேசச் சூழல், இயற்கை வளம் என்பவற்றோடு ஒன்றியதாக விஞ்ஞானக் கல்வி அமையவேண்டும். அப்போது தான் எதிர்காலப் பிரசைகளான மாணவர்களால் தங்கள் மண்ணின் விருத்திக்கு, மக்களின் முன்னேற்றத்துக்கு உழைக்க முடியும்; உதவ முடியும்.

மாணவப் பருவத்திலிருந்தே தான் வாழும் தாயகம், அதன் வளம், அந்த வளத்தை மக்களின் சுபீட்ச வாழ்க்கைக்கு பயன்படுத்துதல், பயன்பாட்டுக்கான சாத்தியங்களைக் கண்டறிதல் (Explore) ஆகிய துறைகளில் ஆர்வத்தையும், விருப்பத்தையும், பயிற்சியையும் உருவாக்குதல் அவசியம்.

அதற்கேற்ற விதத்தில் விஞ்ஞானக் கல்விபோதனை முறைகளும், பாடநெறிகளும் மாற்றி அமைக்கப்படவேண்டும். தனது சூழலிலிருந்து மாணவனை பிரித்து வைத்து, வேற்றுமைப்படுத்தி வைத்து, விஞ்ஞானக் கல்வியைப் போதிப்பதால் எவ்வித பயனுமில்லை. அதன் மூலம் மாணவனால் நாடு பயன் பெறவும் முடியாது; நாட்டினால் மாணவனும் நன்மை அடைய முடியாது.

பெளதிகம், இரசாயனம், உயிரியல், தாவரவியல் என்று வெறும் விஞ்ஞானக் கோட்பாடுகளை மட்டுமே போதித்து எங்கள் மத்தியில் எத்தனை விஞ்ஞானிகளைத் தோற்றுவிக்க முடியும்? நாடு எவ்வாறு விஞ்ஞானிகளின் சேவையைப் பெறமுடியும்? விஞ்ஞானத்தில் எப்படி வளர்ச்சி காணமுடியும்?

ஆகக் குறைந்தது விரைந்து முன்னேறும் அடுத்த நாடுகள் கண்டறியும் தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வதற்காவது எம்மை நாம் தயார் செய்யமுடியுமா?

விஞ்ஞானக் கல்வி போதனை மிகத் தீர்க்கதரிசனத்துடன் கையாளப்பட வேண்டிய ஒன்று. இல்லையேல் நாடும் மக்களும் பின்தங்கிச் சீரழிய நேரிடும்.

# வடமராட்சி கிழக்கில்
## கி. சேவையாளர் பிரிவுகள்

வடமராட்சி கிழக்கில் மேலும் 7 புதிய கிராமசேவையாளர் பிரிவுகள் உருவாக்கப்படவுள்ளன.

புதிய கிராமசேவையாளர் பிரிவுகளுடன், வடமராட்சி கிழக்கின் கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை 11இல் இருந்து 18ஆக அதிகரித்துள்ளது.

இப்பகுதியில்பயிர்ச்செய்கை உத்தியோகத்தராக கடமையாற்றியவர்கள், கிராம சேவையாளர்களாகப் பதவி மாற்றஞ்செய்யப்படவுள்ளார்கள். [க-144]

## வீடுகட்ட உதவி

தாளையடி, செப். 14

வடமராட்சி கிழக்கில் இராணுவ நடவடிக்கையினால் பாதிப்படைந்தவர்களுக்கு 14 வீடுகளை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்தானிகராலயத்தின் உதவியுடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இவை ஒவ்வொரு வீடும் 15 ஆயிரம் ரூபா செலவில் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

(க- 144)

## காயம்

பருத்தித்துறை செப். 14

பருத்தித்துறையிலுள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் மெக்கானிக்காக கடமையாற்றும் அருணானந்தம் சத்தியநேசன் (வயது 25) அண்மையில் பருத்தித்துறையில் நடைபெற்ற அசம்பாவிதங்களின் போது காயமடைந்தார். (த - 118)

## வரட்சி நிவாரண முத்திரை

யாழ்ப்பாணம், செப். 14

கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கான இரண்டாம் கட்ட வரட்சி நிவாரண முத்திரைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வரட்சி நிவாரணம் பெறுபவர்களுக்கான முத்திரைகள் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-76)

வடமராட்சி கிழக்கு

# உதவி அரசாங்க அதிபர் பணிமனை
# ரூ. 10 லட்சம் செலவில் அமையும்

பருத்தித்துறை, செப். 14

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் புதிய கட்டடம் சுமார் 10 லட்சம் ரூபா செலவில் மருதங்கேணியில் அமைக்கப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை தற்போது வடமராட்சிகிழக்கு பிரதேச சபையின் செம்பியன்பற்று உப அலுவலகத்தின் ஒரு பிரிவில் இயங்கி வருகிறது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான புதிய கட்டிடத் தொகுதியில் உதவி அரசாங்க அதிபரின் வாசஸ்தலமும் அமைக்கப்படவுள்ளது.

இக் கட்டிடத்தைக் கட்டி முடிப்பதற்குக் கட்டடத் திணைக்களம் பத்து இலட்சம் ரூபா தேவையென மதிப்பீடு செய்துள்ளது.

யாழ். அரசாங்க அதிபர் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையைக் கட்டுவதற்கான அனுமதியைக் கட்டடத் திணைக்களத்துக்கு சிபார்சு செய்துள்ளார் என வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திரசேகரம் தெரிவித்தார். (த - 118)

## வீதியில் பொறிக்கிடங்கு; பாதசாரிகளே கவனம்!

யாழ்ப்பாணம் செப் 14

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியும், கஸ்தூரியார் வீதியும் சந்திக்கும் சந்திக்குச் சற்று அருகில் வீதியில் பொறிக் கிடங்கு ஒன்று உருவாகி உள்ளது.

வீதிக்கு கீழால் செல்லும் வாய்க்கால் ஒன்றை மூடியிருந்த கற்கள் அகற்றப்பட்டிருப்பதன் காரணமாகவே இந்த பொறிக்கிடங்கு உருவாகியுள்ளது.

தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் இந்தப் பாதைகளின் ஊடாக போக்குவரத்துச் செய்வதனால் சில வாகனங்கள் பொறிக்கிடங்கினுள் விழவேண்டிய சூழ்நிலையும் ஏற்படுகின்றது. (த-10)

வவுனியா கச்சேரி ஊழியர்

# தண்ணீர் இன்றி அவதி

சேமமடு செப். 14

வவுனியாக் கச்சேரியில் மோட்டர் பழுதடைந்து போனதால் தண்ணீருக்குப் பெரும் கஷ்டம் உண்டாகியுள்ளது.

இதனால் தண்ணீருக்கு ஊழியர்கள் கஷ்டம் அடைகின்றனர்.

மலசல கூடங்கள் போதிய தண்ணீர் இன்றி நாற்றம் எடுக்கத் தொடங்கியுள்ளன.

வவுனியாக் கச்சேரியில் அமைந்திருக்கும் சிற்றுண்டிச் சாலையிலும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

வவுனியாவின் பல இடங்களிலும் இருந்து, மக்கள் அகதி நிவாரணம் எடுப்பதற்காக வவுனியாக் கச்சேரிக்கே வருகின்றார்கள்.

இவர்கள் சிற்றுண்டிச்சாலையைப் பாவிப்பதால் வவுனியாக் கச்சேரி அரச ஊழியர்கள் உட்கார இடம் இன்றி நின்றபடி தேநீர் அருந்துகின்றார்கள். (இ-37)

## மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம் செப் 14

மறைந்த வில்லிசை மாமணி சபா சதாசிவத்தின் மகன் செல்வன் வேல்மாறனின் மிருதங்க அரங்கேற்றம் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

ப்ரம்மஸ்ரீ க. இரமநாதனின் இசைக்கச்சேரிக்கு இவர் மிருதங்கம் வாசிப்பார்.

செல்வன் வேல்மாறன் யாழ் அண்ணாமலை இசைத் தமிழ் மன்ற மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## வேண்டுதல்

மாங்குளம் செப். 14

முல்லைத்தீவு பொதுநூலகத்துக்கு நூல்களை அன்பளிப்புச் செய்யுமாறு நூலகப் பொறுப்பதிகாரி திருமதி இ. ஜெயச்சந்திரன் வேண்டியுள்ளார். (க - 94)

# கச்சியப்ப சுவாமிகள்
## திருவுருவப்பட திறப்பு விழா

யாழ்ப்பாணம் செப். 14

கந்தபுராண ஆசிரியர் கச்சியப்ப சுவாமிகள் திருவுருவப் படத் திறப்பு விழா நீராவியடி வீரசக்தி விநாயகர் ஆலயத்தில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

சிவப்பர் மன்ற ஆதரவில் மன்றத் தலைவர் திரு. கா. மதியாபரணம் தலைமையில் நடந்த இவ் விழாவில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் கந்தபுராணத்தின் தத்துவங்களை எடுத்துக் கூறினார்.

ஆத்மஜோதி நா. முத்தையா, வித்துவான் க. கணபதிப்பிள்ளை, வைத்திய கலாநிதி நா. கனகரத்தினம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

மன்றத் தலைவர் திரு. கா. மதியாபரணம் ஆற்றிவரும் சேவையைக் கெளரவிக்கும் வகையில் "சைவபூஷணம்" என்னும் பட்டம் சூட்டி கெளரவிக்கப்பட்டார். [இ-3]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 14

யாழ். பல்கலைக்கழக கலைத்துறையின் சமூகவியல் மன்ற மாணவர்கள் மார்க்ஸிசம் பற்றிய கருத்தரங்கு ஒன்றை நடாத்தி வருகின்றனர்.

கடந்த வாரம் ஆரம்பமான இந்த கருத்தரங்கின் அறிமுக வுரையை பேராசிரியர் சிவத்தம்பி நிகழ்த்தினர்.

மார்க்ஸிசம் பற்றி பல்வேறு தலைப்புக்களில் பல பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் தொடர்ந்து 14 வாரங்கள் கருத்துரை வழங்கவுள்ளனர்.

புதன்கிழமை தோறும் பிற்பகல் 3மணிக்கு இக்கருத்தரங்கு செல்வநாயகம் மண்டபத்தில் இடம்பெறும். (த)

# அமைதிப்படையினர் தாயகம்
## செல்வது நிரந்தரமா அல்லது...!

கொழும்பு, செப் 14

இந்திய அமைதிப்படையினர் விடுமுறையில் செல்கின்றனரா? அல்லது உண்மையிலேயே நிரந்தரமாகத் தாயகம் திரும்புகின்றனரா?

சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எச். பி. திஸநாயக்கா கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைத்த கேள்வியைக் கேட்டார்.

இந்தியப்படை வெளியேறுவதாக ஒருபக்கம் கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் விடுமுறையில் செல்வதாக இன்னொரு தரப்பில் கூறப்படுகின்றது.

உண்மையில் என்னதான் நடக்கிறது? எத்தனை ஜவான்கள் நாடு திரும்பினர்? எத்தனைபேர் விடுமுறையில் சென்றனர்? இவர்களில் எத்தனை பேர் மீண்டும் திரும்பினர்?

— இப்படி திரு. திஸநாயக்கா மேலும் கேட்டார்.

இக்கேள்விகளுக்கு பதிலளிக்க பதில் வெளியுறவு அமைச்சர் ஜோன் அமரதுங்கா கால அவகாசம் கேட்டார். (ஐ-எ)

## பம்பைமடுவில் முகாம்

வவுனியா, செப். 14

வவுனியா பம்பைமடுவில் இந்திய அமைதிப்படையினர் முகாம் அமைத்து நிலைகொண்டுள்ளனர். (க-164)

## அந்த இருவரும் எங்கே?

சேமமடு செப். 14

கடந்த மாதம் வவுனியாவில் நவகம் என்ற இடத்தில் இரு உத்தியோகத்தர்கள் இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டனராம்.

அவர்களில் ஒருவர் காமினி இரத்தினாயக்கா என அழைக்கப்படும் விளையாட்டு அதிகாரி வயது 25.

தயாபால குமாரசிறி மற்றவர். இவர்ஓர் ஆசிரியர் வயது 26.

உறவினர்கள் வவுனியாவிலுள்ள இராணுவ முகாமில் விசாரித்தபோது அப்படிப்பட்ட எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்பட்டதாம். (ஓ -37)

தமிழ் எழுத்தாளர்களுக்கு

# சாகித்திய மண்டலப் பரிசு வழங்குவதற்குத் திட்டம்

சேமமடு, செப். 14

வடக்கு - கிழக்கு மாகாண சபை, சாகித்திய மண்டலப் பரிசுத்திட்டம் ஒன்றைத் தமிழ் எழுத்தாளர்களுக்கு அறிவித்துள்ளது.

நாவல், சிறுகதை, நாடகம், கவிதைத் தொகுப்பு, ஆக்க இலக்கியங்கள் என்ற ஐந்து துறைகளுக்கும் தலா 3000 ரூபாக்கள் பரிசளிப்பதற்கு மாகாண சபையின் கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

1988 - 89 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் எழுதப்பட்ட இத்துறை சார்ந்த எழுத்துக்களுக்கே பரிசு வழங்கப்படும்.

இப்படைப்புக்களைச் செப்டெம்பர் 30க்கு முன்பு அனுப்ப வேண்டுமெனக் கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு கோரியுள்ளது. (ஐ-37)

கிழக்கில்

# 30 தொழிற்சங்கங்கள் இணைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் 30 தொழிற்சங்கங்கள் இணைந்து கிழக்கு மாகாண தொழிற்சங்க அமைப்பு ஒன்றை ஆரம்பித்துள்ளன.

அண்மையில் சார்லிஸ் மண்டபத்தில் இதன் முதலாவது மாநாடு திரு. எஸ். [illegible] தலைமையில் நடைபெற்றது.

ஈழத் தொழிற்சங்க சம்மேளன தலைவர் திரு. வி. ஏ. கந்தசாமி மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இம்மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

★ அரச ஊழியர்களுக்கு ஆகக்குறைந்த மாதச் சம்பளமாக ரூபா 2,500 வழங்கப்படல் வேண்டும்.

★ ஜனாதிபதி ஓய்வூதியமாக பதவிக் காலத்தில் பெற்ற கடைசி சம்பளம் வழங்கப்படுவது போல் அரச ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். (இ-21)

## வாசகர் திருமுகம்

### குறை நீங்குமா?

காரைநகர் — யாழ்ப்பாணம் 785, 782 இலக்க பஸ்கள் கடந்த சில தினங்களாக காலை 7 மணி தொடக்கம் 8 30 மணி வரைக்கும் சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை.

இதனால் சீசன் டிக்கற் பெற்றவர்கள் தனியார் பஸ்களை நாடவேண்டி உள்ளது. காரைநகரில் இருந்து யாழ் நகருக்கு தொழில் காரணமாக வந்து போகின்றவர்கள் அடையும் கஷ்டம் சொல்லுந்தரமன்று.

இ. போ. ச. நிர்வாகம் இக்குறையைக் களைந்து சீசன் டிக்கட் பெற்றுள்ளவர்களின் இன்னல்களைத் தீர்த்து வைக்குமா?

ரி. பவானி
மூளாய்

### திக்கத்தில் மின் பிரச்சினை

கடந்த இரண்டு மாதங்களாக வடக்கு மாகாணத்திற்கு மின்சாரம் தடைப்பட்டுள்ளது. ஆயினும் சுன்னாகத்தில் இருந்து "ஜெனரேட்டர்" மூலம் யாழ். மாவட்டத்திற்கு சுழற்சி முறையில் மின் விநியோகிக்கப்படுகிறது.

ஆனால் எமது திக்கம் கிராமத்தில் பனைமரம் விழுந்ததையால் மின் கம்பிகள் அறுந்து விட்டன. ஆனால் கடந்த 1½ மாதங்களாக இ. மி. சபையின் வடமராட்சிக் கிளையின் அசமந்த போக்கினால் இது இன்னும் திருத்தப்படாமலே இருக்கிறது.

இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்வார்களா?

சண்முகநாதன் - சண்முகரூபன்,
திக்கம்.

### பஸ் பயணிகள்

இ. போ. ச. பஸ்களில் ஏறியதும் உள்ளேபோகாமல் வாசலில் ஒரே நிலையாக நின்று விடுகின்றனர். பின்னர் தொடர்ந்து ஏறும் பயணிகள் இதனால் பெரிதும் இடர்படுகின்றனர். வயோதிபர்கள், நோயாளிகள், கர்ப்பவதிகள் முதலியோர் பஸ்சிற்குள் கம்பியைப் பிடித்து ஏறுவதற்கு இவர்கள் பெரும் இடைஞ்சலாக இருக்கின்றார்கள். அத்துடன் பஸ் கொண்டக்டர்களின் வேலையையும் இவர்கள் பாரிக்கத் தொடங்கி பயணிகளைக் குழப்பி அடிக்கின்றார்கள்.

இவர்களை பஸ் கண்டக்டர்கள் ஒழுங்குபடுத்தினால் தான் பொதுமக்கள் இலேசாகப் பிரயாணம் செய்ய முடியும்.

எஸ். துரை
யாழ்ப்பாணம்.

## கண்டதும் கேட்டதும்

வன்னிப் பிரதேசத்தில் முன்பை விட இப்போது பேக்கறித்தொழில் முன்னேற்றம் அடைந்து வருகிறது. அழகாக "மாலு பணிஸ்" செய்யப்பட்டு ஹோட்டலுக்கு வருகிறது. விலை ரூபா 4 00.

பெயர் "மாலுபணிஸ்" சாப்பிட்டதும் விஷயம் விளங்குகிறது. உள்ளே இருப்பது மரக்கறியே........!

மேற்கண்ட விடயத்தை வன்னிப்பகுதியிலிருந்து ஒரு நேயர் எமக்கு எழுதுகிறார்.

வன்னிப் பகுதியில் மட்டும் அல்ல கொழும்பிலும் இதே நிலைமை தான். ஆனால் கொழும்பில் "மாலு பணிஸ்" சிறிது வித்தியாசம்.

"மாலு பணிஸ்"க்குள் மரக்கறிக்குப்பதில் பம்பாய் வெங்காயத்தில் தயாரிக்கும் சீனிச்சம்பல் வைத்திடுவார்கள்.

யாழ்ப்பாண ஹோட்டல்களும் இவற்றுக்குச் சளைத்தவை அல்ல.

சிலஹோட்டல்களில் இரவில் மீதமாகும் உணவு வகைகள் காலையில் கடக்கட அழகான இட்லிகளாகி தோசைகளாகி — வடைகளாகி உருமாறி வருகின்றன.

போண்டாவிலும், பற்றீஸிலும் ரோல்களிலும் உருளைக்கிழங்கின் இடத்தை மரவள்ளிக்கிழங்கு பிடித்துக் கொள்கிறது.

உருளைக்கிழங்கின் இடத்தை மரவள்ளிக்கிழங்கு பிடிப்பது பெரிய காரியம் அல்ல! ஆனால் தரத்துக்கு ஏற்ப விலை இருக்க வேண்டும்!!

—செய்தி லோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியாலை நீர்நொச்சித்தாழ்வு
# ஃ ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா சிறப்புமலர் ஃ
14 - 09 - 1989

தேரேறும் சித்திவிநாயகனே!
பாரினிலே வினை தீர்த்திடுவாய்!

**பிறிலியன் ஜுவலறி**
240/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ BATA, DSI, RANPA, SINWA ★
★ மற்றும் உள்ளூர் தயாரிப்பான பாதணிகள் ★
நீண்ட காலப் பாவனைக்கேற்ப நவீன முறையில்
செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும்
விற்பனை செய்பவர்கள்
★ **சந்திராஸ்** ★
62, 63, நவீன சந்தை — யாழ்ப்பாணம்.
Prop - திருமதி சி. ஆழ்வாப்பிள்ளை

எம்மிடம் சகலவிதமான பாவனைப் பொருட்களும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
**சித்திராஸ்**
முள்ளி வீதி, அரியாலை.
Prop - பொ. சற்குணானந்தன் — நயினை.

●● கூரை வேலைகள், கதவு, நிலை, யன்னல்
மற்றும் தளபாடங்கள் சிறந்த முறையில்
செய்து கொள்வதற்கு
★ **செல்வா** ★
தச்சுத் தொழிற்சாலை
உரிமையாளர் செ. செல்வநாதன்

★ ★ ★ சிறந்த முறையில் ★ ★ ★
வர்ண, கறுப்பு — வெள்ளை புகைப்படங்களைப்
பிடித்துக் கொள்ள வெளிப்புறப் படப்பிடிப்பின்
முன்னோடிகள்
● **ஜனு போட்டோ** ●
36, கனகரத்தினம் வீதி, அரியாலை.

குவைத், சவூதி, சிங்கப்பூர், ஹொங்கொங் ஆகிய
வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப்
பெற்றுக் கொடுப்பவர்கள்
**மியூனிஸ்ற் என்ரபிறைஸ்**
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு எதிரில்)
1 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

## அரியாலையூர் சிறப்புற்று விளங்க
# பேரருள் புரியும் சித்தி விநாயகர்

அரியாலையூர் அரியகலையூர் என அறிஞர்களால் பாராட்டப்பட்டதுண்டு. இவ்வூர் மக்கள் சைவ ஆசாரசீலர்கள் பலர் அரிய கலைஞர்களாகவும் திகழ்கின்றனர். சிற்பக் கலைஞர்கள், ஓவியக் கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள், பாடகர்கள், கவிஞர்கள் போன்றோரை நிறையக் கொண்டது இவ்வூர்.

இவ்வூர் மக்கள் இவ்விதம் சிறப்புற்று பேரோடும், புகழோடும், பொருளோடும் விளங்க மூலகாரணமாக அமைந்தது அரியாலையூ ல் சிறப்புற அமைந்த நீர்நொச்சித்தாழ்வெனும் பதியில் உள்ள சித்திவிநாயகராலயமும் அதற்கண்மையில் கந்த புராணம் படிப்பதற்காக அமைந்த பள்ளிக்கூடமும் என்று கூறின் மிகையாகாது.

வரலாற்று வழிசெல்லின் இவ்வாலயம் யாழ்பாடி காலத்ததெனக்கருதப்படுகின்றது. இது பழைய நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கும், ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசாட்சிக்கும் முற்பட்டது என்றும் கந்தபுராணம் தோன்றிய காலத்தில் காஞ்சிக் கணேசரையர் அவர்களால் அங்கிருந்து விக்கிரகம் கொண்டுவரப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட ஆலயம் இது என்றும் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்தில் வைதிக கலாசார விருத்திக்கு வித்திட்டதே இவ்வாலயம்தான் என்



பது ஃவரது கருத்து:

16 ஆம் நூற்றாண்டில் பறங்கியரது தொல்லைகளிலிருந்து விக்கிரகங்களையும் விலையுயர்ந்த பொருட்களையும் காப்பாற்ற தெய்வப்பற்று மிக்க அந்தணர்கள் அவற்றை சன நடமாட்டமில்லாத இடங்களில் மறைத்து வைத்திருந்தனர். அப்படி மறைத்து வைக்கப்பட்டிருந்த சித்தி விநாயகர் விக்கிரகம் இப்பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களால் கண்டெடுக்கப்பட்டு, பெரியோர்களால் அவ்விடத்திலேயே ஓர் ஆலயம் கட்டப்பட்டதெனும் கர்ணபரம்பரைக் கதை இன்று நிலவிவருகின்றது.

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு எனும் புண்ணிய பூமியில் கோயில் கொண்டிருக்கும் சித்திவிநாயகர் விக்கிரகம் ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொன்மை வாய்ந்தது என்பதில் ஐயமில்லை.

நமது முன்னோர்கள் அதனைப் பாதுகாத்து கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்து வழிபட்டு வந்தனர். அன்று தொட்டு இன்றுவரை நித்திய நைமித்திய பூசைகளை ஆற்றி இஷ்டகாமிய மோட்சங்களைப் பெற்று வந்தனர் என்றும் அப்பெருமானின் பேரருட்டிறத்தால் அரியாலையூர் எல்லா வழிகளிலும் சிறந்து விளங்குகின்றது என்றும் சொல்லப்படுகின்றது.

மூலஸ்தானம் தொடக்கம் கொடிஸ்தம்ப மண்டபமீறாக பாரிய வெண்கற்களால் பன்னூறாண்டு அழியாதிருக்கும் வண்ணம், சிற்பவேலைப்பாடுகள் பொருந்திய திருக்கோயிலும்; அதனோடிணைந்த வசந்த மண்டபம், வைரவர்கோயில், சண்டேசுவரர் கோயில் மடைப்பள்ளி முதலியனவும் கட்டப்பட்டு 1915 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

ஆலயத்தை அணி செய்து நிற்கும் ஐந்து வாயில்களை உடைய இராஜகோபுரமும் மணிக்கோபுரமும் கட்டிமுடிக்கப்பட்டு 1978 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மூர்த்தி, தீர்த்தம், தலம் என்பன ஒருங்கே பொருந்தி அமையப்பெற்ற ஆலயத்தில் அமர்ந்து வேண்டுவார் வேண்டுவது ஈந்து வருகின்றார் சித்தி விநாயகர்.

மலர் ஏற்பாடு:
செல்லக்கண்டு
செல்வதாஸன்
அரியாலை

கரு பொது சாதாரண, உயர்தர வகுப்புக்களும்
ஏனைய வகுப்புக்களும் ஆரம்பமாகிவிட்டது.
* * * * * * *
**பேரடெனியா இன்ஸ்ரிரியூட்**
கொக்குவில், இந்துக்கல்லூரி எதிரில்

நெல் குற்றவும், அரிசி, மிளகாய் மற்றும்
தானியவகைகள் சிறந்த முறையில்
அரைத்துக் கொள்ளவும்,
**அரியாலை றைஸ் மில்**
418, நாவலர் வீதி.
(மாம்பழம் சந்திக்கு அண்மையில்)
★ மின்தடை ஏற்பட்ட போதும்
எமது சேவை தொடர்கிறது -

அமைதியும் சுபீட்சமும் ஏற்பட
சித்திவிநாயகர் அருள்புரிவாராக!

**மெடிக் கெயர் கிளினிக்**
டாக்டர் வை. ருத்திரேஸ்வரன்
344, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

சகலவிதமான வீட்டுக்கூரை, நிலை, கதவு மற்றும்
தளபாடங்கள் நேர்த்தியான முறையில்
குறித்த தவணையில் செய்வதில் முன்னோடிகள்
★ **பிரபாகரன்** ★
மரவேலைத் தொழிலகம்
நாவலர் கனகரத்தினம் வீதி - சந்தி,
அரியாலை.
உரிமை: வல்லிபுரம் தர்மலிங்கம்

ஃ **இரத்தினம் கடை** ஃ
சைக்கிள் உதிரிப்பாகங்கள் கட்டடப் பொருள்கள்
விற்பனையாளர்.
உரிமையாளர்: V. செல்லத்துரை
நாவலர் கனகரத்தினம் வீதிச்சந்தி,
அரியாலை.

அரியாலை
**தெங்கு பனம்பொருள் உற்பத்தி
விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்**
இல: 15, நடுத்தெரு லேன்,
அரியாலை.

★ உரவகைகள் ★ கிருமிநாசினிகள்
★ கோழித்தீன் ★ மாட்டுத்தீன்
மற்றும் பலசரக்கு வியாபாரத்தில் முன்னோடிகள்
**அரியாலை கால்நடை உணவு
விற்பனவு நிலையம் அன்
அரியாலை மல்ரி மாக்கற்**
470, கண்டி வீதி, அரியாலை.

ஆண்டு 1 தொடக்கம் 5வரை சகல பாடங்களும்
ஆண்டு 6, 7, 8, 9, 10, G.C.E (O/L) கணிதம்
விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், சமூகக்கல்வி ஆகிய
பாடங்களும் நடைபெறுகின்றன.
**Rubaa Science Centre**
றூபா விஞ்ஞானக் கல்வி நிலையம்
92, கனகரத்தினம் வீதி, அரியாலை.

ஆரம்பம்:1936  தொலைபேசி:22689
ஸ்ரீ **பார்வதி அச்சகம்**
SPA Sri PARWATHI PRESS

**THARRMSONS**
கட்டட ஒப்பந்தகாரர், கட்டடப்பொருள் விநியோகஸ்தர்கள், டிசைனேர்ஸ்
உரிமையாளர்: V. T. தர்மேந்திரன் (பாபு)
இல. 4, கனகரத்தினம் வீதி, அரியாலை.

ஆடவர் ரசனைக்கேற்ற றெடிமேட் சென் பீற்றர், ஜகா, நங்குலர், வாணி ஹறூ, கொட்றோய்
டெனிம், ரவுசர்கள், காஃட் லீவ், ஜவாரினோ மற்றும் அலங்காரப் பொருட்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**HAPPY TEXT**
149, 168 Modern Market,  104, ஸ்ரான்லி வீதி,
கிளை: 2ஆம் கட்டடம் நவீன சந்தை.
யாழ்ப்பாணம்.

அச்சு வேலைகட்கும் மற்றும்
சகல காரியாலய, பாடசாலை
காகிதாதி உபகரணங்கட்கும்
★
**தாரணி அச்சகம்**
கண்டி வீதி.
ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, சந்தி

**பனம் பொருள்
அபிவிருத்திச்சபை**
★
இல. 47, 1ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

**எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி**
(மருந்துகள், மருந்துச் சரக்குகள், வாசனைப் பொருட்கள்,
தயாரிப்பாளரும் விநியோகஸ்தர்களும்)
53, காங்கேசன்துறை வீதி,  160, செட்டியார் தெரு,
யாழ்ப்பாணம்.  கொழும்பு - 11
★ உடன் யந்திரங்களினால் அரைத்த சந்தனம் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்

வீடியோ கலையின் அரங்கம்  புகைப் படத்துறையின் கரங்கம்
படப் பிடிப்பில் அது சிகரம்
அதுதான்
★ **லக்சி வீடியோ மூவி** ★
LUXEY VIDEO MOVIE
கனகரத்தினம் வீதி, அரியாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச் சந்நிதி தேர்த் திருவிழாச் சிறப்பிதழ்

### ஆற்றங்கரை உறையும் அறுமுக வேலா

பல்லவி
ஆற்றங்கரை உறையும்
அறுமுகவேலா உனை
போற்றிப்புகழ அருள்வாயே
அனுபல்லவி
காற்றுப் போல் உன்கருணை
உயர் ஒளிஞானம் வீரம்
ஆற்றல் இளம் அழகு ஆறும் அமையதோன்றும்:

வல்வை. பொ. வேலும்மயிலும்

### வல்லமை தந்திடுவாய்!

செல்வச் சந்நிதிச் செங்கதி ரோனே
வெல்லும் வேற்படை வேலவன் நீயே
அல்லும்பகலும் உன்னை நாடி நின்றோமே
நல்லவனே எம் உயிர் காத்தருளாயே

உள்ளம் அலையுதையா உறுதி குலையுதையா
வெள்ளம் வந்த பின்னே அணைபது கோலுவது
மெல்ல மெல்லவே எங்கள் ஆவி குலையுதையா
நல்ல அமைதியுடன் வல்லமைதந்திடுவாய் !

— திருமதி பூ. தர்மபாலசிங்கம்

தொண்டைமானாறில் உன்றே சக்திவேல்
கண்டுமனமாற முந்திச்செல் தினமே!
வார்ப்பு, பிளாஸ்ரிக் பாத்திர வகைகள்,
கிடாரம், குடம். இரும்புச் சட்டிகள், பாக்ஸ்,
வாளிகள் போன்றவற்றை
சில்லறையாகவும் மொத்தமாகவும் எம்மி ம்
பெற்றுக் கொள்ளலாம்:
ராஜா ரேட் சென்ரர்
3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சந்நிதி முருகன் தேரேறி வருகின்ற
அந்த நாள் வந்தது! தொல்லைகள் தீர்ந்தது!
★ தங்கப் பவுண் நகைகளை
★ விற்கவும் வாங்கவும்
நியூ ஈழம் ஜுவல்லறி மார்ட்
423 (247). கே. கே. எஸ். வீதி,
சிவன் கோவிலடி,
யாழ்ப்பாணம்,

செல்வச் சந்நிதியானிடம் சென்று
எங்கள் குறைகளைச்
சொல்லித் தொழுது நிற்போம்!
ஐஸ்கிறீம், சர்பத்
குளிர்பானங்கள்
அறுசுவை உண்டிகள் உண்டு
மகிழ்ந்திட நாடவேண்டிய இடம்
லிங்கம் கூல்பார்
&
கிறீம் ஹவுஸ்
(வெலிங்டன் சந்தி)
52, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தமிழ் மக்கள் படும் வேதனை காணாது
மறைந்து நின்றனையோ? நினது
திருத்தேர் பவனியுடன் இப்பூமியில்
புத்துணர்வு பொங்கிடட்டும்!
VANIKAA MEDICALS
274/2, Hospital Road, Jaffna.

குமரப் பெருமானின் அருட் கடாட்சம்
பொங்கும் செல்வச் சந்நிதியாம்
கடல் சூழ் திருத்தலத்தின் மகிமை ஓங்க
பிரார்த்திப்போம்!
★ முகூர்த்தப் பட்டுப் பிடவைகளுக்குப்
பெயர்பெற்ற ஸ்தாபனம்
★ காவேரி சில்க்ஸ் ★
48, பெரியகடை. யாழ்ப்பாணம்.
கிளை: காவேரி ரெக்ஸ் சென்ரர்,
181, நவீன சந்தை, யாழ்ப்பாணம்; (உட்புறம்)

# முருகன் — அவன் அருளாளன்;
# தேர்வலம் கண்டு உய்வோமாக!

முருகன் பாலன், குமரன், அழகன்;

கற்பியலிலும், களவியலிலும் காதலைக் காட்டிய ஜீவர்களின் போஷகன், புலவர்களோடு ஊடாடிய தமிழ்ப் புலவன்; பிரணவத்திற்கு விளக்கங் கூறிய சரீவ சாஸ்திர சம்பன்னன்; தேவசேனைகளுக்கெல்லாம் பதியாகிய போர் வீரன்; துஷ்டர்களைக் 'குற்றந்தனக்கியையுற்றிறம்' தண்டிக்கும் நீதியாளன்; அவை மட்டுமல்ல; தீயவர்களைத் திருத்தி நல்லவர்களாக்கும் அருளாளனும் கூட.

சுரர்களைத் துன்புறுத்தும் சூரபத்மனும் அசுரர் கூட்டத்தை அடக்க வருகின்றான் கந்தன்; பத்து நாள் போரில் இரண்டாம்நாளே அலட்சியத்துடன் போருக்கு வந்த சூரன் தோற்று ஒளித்தோடுகிறான்: இதனைத் தெரிந்தும் வேலெறிந்து அவனை அழிக்காமல் "தப்பிப் போகட்டும்; யோசித்துத் திருந்தட்டும்" என்று விட்டு விடுகிறான் குமரன்:

'மறைந்து போய சூர்
முயற்கியை மன்னுயிர்
தோறும்
உறைந்த நாயகன்
கண்டனன் ஒரு தனிச்
செவ்வேள்
எறிந்து மற்றவனுயிர்
கொள நினைந்திலன்
இன்னும்



மறிந்து தீயவன் உய்யுமோ
எனும் திருவருளால்'
என்கிறது கந்தபுராணம்,

திறல்-தசை-உடற்குறைகள்-பிணக்குவியல்கள். தன் கண் பார்வையே நெருப்பாக அவையெல்லாவற்றையும் சாம்பராக்கிய முருகனுக்குச் சூரனை மட்டும் சாம்பராக்க மனம் வரவில்லை; அவனை விட்டு வைக்கிறான்;

இறுதியில் வேற்படையால் சூரனை மயிலும், சேவலுமாக்குகிறான் சண்முகன்; அக்கினிப் பார்வை பார்த்த அறுமுகன் விழிகள் சூரனை அருள்நோக்கம் செய்கின்றன. தீயவன் நல்லவனாகிறான்; அசுரன் சுரனாகிறான்: 'கரும்பொன் செம்பொன்' ஆகியதுபோல,

'தீயவை புரிந்தாரேனும்
குமரவேள் திருமுன்னுற்றால்
தூயவராகி மேலைத் தொல்
கதியடைவரென்கை
ஆயவும் வேண்டும்
கொல்லோ...'

என்று கேட்கிறார் கந்தபுராணம் ஆக்கிய கவிஞர்:

கொடியவனாக இருந்து தேவர்களைத் துன்புறுத்திய

அராலி பரமேஸ்வர சர்மா

கடைசிக் கட்டத்திலும் எல்லா வல்லமைகளையும் திரட்டிக் கொண்டுவந்தும் அசுரன் தோற்கிறான். யுத்தகளம் முழுவதும் அளவிடமுடியாத இர

சூரபத்மன் முருகப்பெருமானால் திருத்தப்பட்டபின் என்ன நிலையிலிருக்கிறான்? முருகனைத் தேவர்கள் வந்து வணங்கும்போது, அவருக்கு வாகனமாக அமைந்து குமாரப் பெருமானின் தாசனாகவே ஆகிவிட்ட சூரன் தன் திருவடியைத் தூக்கி அவர்களுக்கு வைத்து ஆசீர்வாதம் செய்கிறான்.

அசுரனாக இருந்தபோது யாரைத் துன்புறுத்தினானோ அந்தச் சுரர்களை முருகனால் திருத்திவிட்ட சூரபத்மன் அருள்புரிந்து ஆசீர்வதிப்பது அற்புதமானது!

'பாவியை வெறுக்காதே, பாவத்தை வெறு' என்ற தத்துவப்படி குற்றஞ் செய்தவனைத் தண்டிப்பதைவிட, இயலுமானவரை அவனைத் திருத்துவது உயர்ந்தது; அத்தனை கொடிய அசுரனைத் திருத்தி இத்தனை நல்லநிலையில் வைத்த முருகன் திருவருளை எண்ணும்போதெல்லாம் புளகாங்கிதமடையாமல் இருக்க முடியாதன்றோ?

பழம்பெரும் பதியாம் செல்வச்சந்நிதியில் குடிகொண்டிலங்கும் கந்தன் இன்று தேரேறி அடியவர்களுக்கு அருள்பாலிக்கிறான்; அவனது திருவருள் கிடைத்தற்கரிய திவ்வியம்!

வடக்கின் கதிர்காமமாக விளங்கும் செல்வச்சந்நிதியான் தேர் வலம் கண்டு உய்வோமாக,

### செல்வக் குருநாதா!

செல்வச்சந்நிதி வாழும் எங்கள்
செல்வக்குரு நாதா வேல் வேல்
செல்வக்குரு நாதா வேல் வேல்
செல்வக்குரு நாதா ............... (செல்)
அரிதிருமருகா அரகர முருகா
அசுரர்கள் மடியச் சமர்புரிந்தவனே
அமரர்கள் பதியின் சிறைதனை விடுத்தாய்
அரசேசண்முகப் பிரபோசரணம் (செல்)
திரிபுர சுந்தரி தன் மகனே
வரும்வினை நீக்கிட வல்லவனே
அருளெனும் அமுத ஊற்றில் சிறுதுளி
பருகத்தருவாய் பரம தயாளா

—கே. கே. கிருஷ்ணபிள்ளை

### வெல்ல அதோ முகம் பார்!

மறக்க நினைக்கவொண்ணு
மால்மருகன் மாசண்முகம்
மறைக்கே முதலான
மாம்பழம் சொல் மலைராசா
குறத்தி விளையாடக்
கொண்டவேடக் கதிர்காமம்
முறைக்கே தேர்பவனி
முத்தொழிலும் காட்டும் ஆறு
செல்வச் சந்நிதியின்
செல்வமென்னப் பக்தர் கூட்டம்
மெல்லக் கலைதிர
வீதியெங்கும் அமர்ந்திருக்க
நல்ல நெடுந் தேரில்
நாசொல்ல அரோகராவை
வெல்ல அதோ முகம் பார்
காட்டுகிறான் போற்றிடுவோம்!

—மு. க. கதிர்காமத்தம்பி.

அன்னதானக் கந்தனுக்கு அரோகரா!
தேரேறி வரும் செல்வச் சந்நிதி முருகனின் திருக்கடாட்சமும் அருட்கொடையும்
அடியார்கள், அன்பர்கள் அனைவருக்கும் அளவின்றிக் கிடைப்பதாக!
உங்கள் செல்வத்தை சீராகப் பயன்படுத்த
நம்பிக்கை, நாணயத்தின் நண்பனை
ஷப்ருவை இன்றே நாடுங்கள்!!
ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிடெட்
61, நியு புல்லர்ஸ் வீதி, கொழும்பு-4.
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 589310, 500576

### வெல்லும் வழியை நீ தாடா!

குன்றில் ஆடும் குமரனகம்
தென்றல் வீசும் திருச்செந்தூர்
செல்வச் சந்நிதி வாழ் குமரா
செல்வம் தந்து ஆழ் முருகா

கதிரை மேயும் வயல்வெளிகள்
தாமரை பொலியும் திருக்குளங்கள்
சோறு மணக்கும் மடங்கள் பல
ஆறு முகனின் சந்நிதியில்
பக்தர் தங்கள் அலைமோத
காவடியாட்டம் புகழ் பாட
சக்திக் கனலாம் சண்முகனின்
பூவடி வாழிய வாழியவே
விரக்தி மிகவும் நாம் கொண்டு
வெறுமையுள்ள வாழ்க்கையினை
வேலும் மயிலும் துணை கொண்டு
வெல்லும் வழியை நீ தாடா

— மட்டுவில் சி. சதாசிவம்

வேலவனின் தேர் பவனியை
காண ஆவல் கொண்டோம்!
இமயமலைபோல் உமது அருள்
விருட்சத்தை விரைந்து பரப்பிடுவீர்!
★ VELAVANS ★
210, Hospital Road, Jaffna.

செல்வச் சந்நிதியில் உறையும்
கந்தபெருமானின் திருத்தேர் பவனியை
காண விழைகின்றோம்!
★ தரமான குதிரைமார்க் ஓடுகள் மற்றும்
ஏனையரக ஓடு, செங்கல் பூக்கல், பூச்சாடி
விற்பனையாளர்கள்:
★ துரித பாதுகாப்பான யாழ் - கொழும்பு
லொறி போக்குவரத்து சேவைக்கும்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
புஷ்பா ரான்ஸ்போட்
(பிரைவேற்) லிமிற்ரட்
101, மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம்.
கொழும்பில்: 162, ஆட்டுப்பட்டித் தெரு.
கொழும்பு-13 தொலைபேசி: 33524

சந்நிதி முருகனின் தேர் பவனியை காணத் துடிக்கும்
ஆயிரமாயிரம் பக்தர்களின் குறைதீர்க்க
வருவான் குமரன்!
அசல் 22 CT. (கரட்) தங்க நகைகளுக்கு
பிரசித்தி பெற்ற ஸ்தபனம்
மஹாலக்ஷ்மி ஜுவல்லரி மார்ட்
213 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 23733

தேர் ஏறித் திருஉலா வந்து
அருள் பாலிக்க பிரார்த்திக்கும்
நிரோஷன் என்ரபிறைஸ்
பருத்தித்துறை வீதி,
மயிலிட்டி, காங்கேசன்துறை.
(T.B. வைத்தியசாலைக்கு முன்பாக)
க. இந்திரலிங்கம் (சந்திரன்)
உங்கள் பயணங்களை நிச்சயிப்பவர்கள்.

செல்வசந்நிதி வாழ் முருகா!
உன் சந்நிதியே எம்மவர்க்கு நிம்மதி!
வினைகள் போக்கி தர்மத்தை நிலைநாட்டிட
எந்நாளும் நீ வரவேண்டும்!
★ RAJU STORES ★
67, 69, Kasthuriyar Road,
Jaffna.

ஏறுமயில் ஏறி வருகையில் வினைகள் பலவும் தீர்ந்திடும்!
நீ தேரேறிடும் போது நல்லருளாட்சி பரவிடும்!
அழகுக்கு அழகு செய்யும்
அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு
சோபனா ஜுவலறி
116 V. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்!
உங்கள் ஆதரவிற்கு நன்றி! மீண்டும் வருக!

சந்நிதி முருகனின் அருள்வேண்டி பிரார்த்திக்கின்றோம்!
தங்கப்பவுண்
நகை வியாபாரம்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்;
★ வெல்கம் ஜுவெல்லறி ★
164, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் சங்கத்தை கட்டி வளர்த்து கட்டுக் கோப்பை ஏற்படுத்தியவர்

## கணபதிப்பிள்ளையின் பிரிவுபசார விழாவில் உரை

காங்கேசன்துறை, செப்.14

"தொழிற்சங்க இயக்கத்தைக் கட்டிவளர்த்து தொழிலாளர்களிடையே கட்டுக்கோப்பை ஏற்படுத்தியவர் திரு. கணபதிப்பிள்ளை. அவரின் தலைமையில் தொழிலாளர்கள் ஒற்றுமையாக செயல்பட்டமையால்தான் சீமெந்து தொழிற்சாலை வளர்ச்சியடையவும் உற்பத்தியில் சாதனை புரியவும் முடிந்தது. லங்கா சீமெந்து நிறுவன தொழிலாளர்களுக்கும் அவரது முன்மாதிரி சிறந்த வழிகாட்டியாக விளங்கியது".

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் பணிபுரிந்து இளைப்பாறும் தொழிற்சங்கவாதி இ. ச. கணபதிப்பிள்ளைக்கு தொழிலாளர்கள் உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகள் ஆகியோர் இணைந்து எடுத்த சேவைநலன் பாராட்டு பிரிவுபசார விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய லங்கா சீமெந்து நிறுவன முகாமையாளர் திரு. எம். ஜனநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் திரு. கணபதிப்பிள்ளை சீமெந்து பொதுத் தொழிலாளர் சங்க அலுவலகத்தில் இருந்து கூட்ட மைதானத்திற்கு மாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார்.

விழாவில் திரு. கணபதிப்பிள்ளைக்கு சிறப்புப்பட்டம் வழங்கி தங்கப்பதக்கமும் சூட்டப்பட்டது.

இதில் காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை முகாமையாளர் திரு. எஸ். ஞானபண்டிதன் நிர்வாக முகாமையாளர் திரு. வி. ரி. சிவலிங்கம் நலன்புரி உத்தியோகத்தர் திரு. சோ. அருந்தவராஜா ஆகியோரும் மற்றும்பல பிரமுகர்களும் திரு. கணபதிப்பிள்ளையின் சேவையைப் பாராட்டி உரையாற்றினர்.

(த-68)

## தமிழர் தேசிய சபைக்கு வவுனியாவில் காரியாலயம்

### மாவட்டக் கூட்டத்தில் முடிவு

தமிழர் தேசிய சபைக்கு வவுனியாவில் காரியாலயம் திறக்க வேண்டியது அவசியம். இதன்மூலம் மக்கள் மத்தியிலும், இயக்கங்கள் மத்தியிலும் ஏற்பட்டுவரும் பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்க்க முடியும்.

மேற்படி சபையின் மாவட்ட ரீதியான கூட்டம் வவுனியாவில் நடைபெற்றபோது மேற்கூறிய முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் காரியாலயத்தின் மூலம் மாவட்டத்தின் வேலைத் திட்டத்தை ஒருங்கிணைந்து மேற்பார்வை செய்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்தக்கூட்டத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் திரு. வெற்றி, ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் சார்பில் திரு. மைக்கன்ரேூ, தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் சார்பில் திரு. ஞானி, திரு நித்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி மூன்று இயக்கங்களின் தலைவர்களும் திருமலையில் சந்தித்து தமிழர் தேசிய சபையை ஸ்தாபித்தபின் மாவட்ட ரீதியில் இதன் அமைப்பு வேலைகள்தற்போது வேகமாக விஸ்தரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## றோட்டறி ஆளுநர் விஜயம்



யாழ்ப்பாணம், செப். 14

றோட்டறி மாவட்டம் 322 இன் ஆளுநர் திரு. வி. சண்முகசுந்தரம் இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார்.

1889-90 ஆண்டுக்கான அபிவிருத்தி புனருத்தாரண வேலைகள் தொடர்பாக யாழ். றோட்டறிக் கழக அங்கத்தவர்களுடன் இவர் கலந்தாலோசிப்பார்.

இன்று றோட்டறிக்கழக சமூக சேவைப் பிரிவால் உரும்பராய் ஞானசம்பந்தர் அனாதைகள் இல்லத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள யாழ். றோட்டறிக் கழகத்தின் அனாதைக் குழந்தைகளுக்கான கல்வி வசதித் திட்டத்திலும் அவர் பங்கு பற்றுவார்.

(இ

## அதிபர் ஓய்வு

நெடுந்தீவு, செப். 14

நெடுந்தீவு மேற்கு ஸ்ரீஸ்கந்த வித்தியாலய அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் செப்டம்பர் மாதம் 3ஆம் திகதி பதவியில் இருந்து ஓய்வு பெற்றார்.

நெடுந்தீவு மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலை உதவி ஆசிரியர் திரு. எஸ். நடராசலிங்கம் ஸ்ரீஸ்கந்தவித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(க-111)

## யோகாசனப் போட்டியும் பரிசளிப்பு வைபவமும்

யாழ்ப்பாணம், செப். 14

சாந்தியோக நிலையம் நடத்தும் யோகாசனப் போட்டியும் பரிசளிப்பு வைபவமும் எதிர்வரும் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் நடைபெறும்.

16 ஆம் திகதி மாலை 3 மணிக்கு ஆண்கள், பெண்கள் ஆகியோருக்கான ஆசனப் போட்டி திவ்வியஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லை திருஞானசம்பந்த ஆதீனத்தில் பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகி சொற்பொழிவுகளும், பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும்.

இந்த நிகழ்ச்சிகள் ஜூலை மாதம் 15 ஆம் 16 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(த)

## உடுவில் - சங்குவேலியில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி

மானிப்பாய், செப். 14

உடுவில் சங்குவேலி விவசாயிகளால் நடத்தப்படும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு திரு. ஆ. நல்லைநாயகம் தலைமையில் நடைபெறும்.

சந்தரோடை மானிப்பாய்ப்பிட்டி கண்ணகை அம்மன் கோவில் அருகாமையில் உள்ள மைதானத்தில் நடைபெறும் இப்போட்டிகள் ஏ. பி. சி என மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

வெற்றிபெறும் காளைகளுக்குப் பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும்.

காளைகளின் கைகொடிச் சவாரியும் இடம்பெறும்.

(க 90)

## நாலாவது ஆண்டு நினைவஞ்சலி



### சின்னப்பு செல்வராசா

தோற்றம்: 02 — 06 — 1928 மறைவு: 28 — 08 — 1985


"பண்பும் பாசமும் பகுத்தறிவும்
பாலுடன் ஊட்டி வளர்த்தார்
பண்பும் பகுத்தறிவும் வளர்கிறது - அவரருளால்
இருந்தும் பாசத்தை ஊட்டியவரை
பறந்தோடித் தேடினோம் - அவரோ
பசித்தவர் விழிகளை பாசமுடன்
பருகுங்கள் என்றார்
பார்த்தோம். பணிந்தோம் - பலன்
அவர் எம் சிந்தையில்
நீக்கமற நிறைந்திருக்கின்றார்"

அன்பு மறவா
மனைவி, பிள்ளைகள்

கோவில் வீதி,
நல்லூர்.

[1900]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. ச. சத்தியமூர்த்தி

(இளைப்பாறிய P. W. D. ஓவசியரும் யாழ் வீதிகள் அபிவிருத்தி அதிகார சபை ஒப்பந்தகாரரும்)

மண்ணில் மாதாவின் அணைப்பில்: 19 - 08 - 1936
விண்ணில் மாதாவின் பிணைப்பில்: 07 - 09 - 1987

திதி: 14 — 09 — 1989

அன்புத் தெய்வமே, ஆசை அப்பாவே,
ஆண்டுகள் இரண்டு சென்றிடினும்
ஆறிடவில்லையப்பா எங்கள் மனம்
எல்லையில்லா அன்புடனே எம்மையெல்லாம் நேசித்தீர்
நம்பிக்கை ஒளியூட்டி ஆனந்தமாய் வாழ வைத்தீர்
துன்பத்தில் எமையாழ்த்தி சந்நிதியில்பிரிந்து விட்டீர்
வெதும்பும் எம் இதயங்கள் வேகுதப்பா உம் பிரிவால்
எனினும் உங்கள் தர்மத்தால் நாம்
தலைநிமிர்ந்து வாழ்கின்றோம்.
எம்முடன் வாழ்கிறீர்கள் என்ற
நம்பிக்கையுடன் வாழ்ந்து
உங்கள் ஆத்ம சாந்திக்காக எங்கள் கண்ணீர்ப்
பூக்களை அர்ப்பணிக்கின்றோம்.

உங்கள் பிரிவால் தவிக்கும்
அன்பு மனைவியும்,
அருமைச் செல்வங்களும்

"சந்தவாசா"
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

[2066]

# தெங்கு - பனம்பொருள் உற்பத்திச்சங்கங்கள் அடிப்படை நிலைமாறிச் செல்கின்றன

## ஈழத் தொழிற் சங்க சம்மேளனம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் செப். 14

சாதிரீதியாக அடக்கி ஒடுக்கப்பட்டு அடிமட்டத்தில் வாழ்ந்து வந்த சீவல் தொழிலாளர்களின் சமூக, பொருளாதார, கலை, கலாசார பண்பாடுகளை பாதுகாக்க உருவான தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள் இன்று இந்த அடிப்படையான நிலைகளில் இருந்து விலகிச் சென்று கொண்டிருக்கின்றன.

தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களில் நிலவும் நிதி மோசடிகள் தொடர்பாக ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தின் இளைஞர் சங்க ஐக்கிய சீவல் தொழிலாளர் சங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அதிகாரப் போட்டி, பிரதேச ரீதியான குறுகிய வாதங்கள், சாதிச்சண்டைகள், நிர்வாகிகளினதும் அதிகாரிகளினதும் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகள் பிழையான வழிகாட்டல், அதிகார துஷ்பிரயோகங்கள் ஆகியவற்றால் இன்று இந் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ் விதமான நிலைகளினால் பல தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கங்கள் பலவிதமான சீரழிவு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட ஒரு இச் சங்கத்தை சேர்ந்த சீவல் தொழிலாளர்களின் உழைப்பின் மூலம் பெறப்பட்ட பணத்தின் ஒரு பகுதியான பல லட்சம் ரூபா சங்கத்தின் கடந்தகால நிர்வாகம் சங்க உப விதிகளுக்கு முரணான வகையில் தனியார் வட்டிக்கடை உரிமையாளருக்கு வழங்கியதன் மூலம் தமது அதிகாரங்களை முறைகேடாக பாவித்துள்ளதுடன், அப்பணத்தை திருப்பி பெற முடியாத நிலைக்கும் ஆளாகி உள்ளது. இது இன்று அம்பலத்துக்கு வந்துள்ளது.

இவ்வாறு பல ... ரூபா முறையற்ற வகையில் செலவளிக்கப்பட்ட சம்பவங்களையும். அதனால் சங்கத்தின் தொழிலாளர் மத்தியில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலவரங்களையும், தற்போதைய நிர்வாகம் அதை சீர் செய்ய முடியாமல் திண்டாடுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

கூட்டுறவு அதிகாரிகள் அறிந்தும் பாராமுகமாக இருக்காது உடனடியாக அதில் தலையிட்டு விசாரணை மேற்கொண்டு குற்றவாளியாக காணப்படுபவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கடந்தகால நிர்வாகிகளால் வழங்கப்பட்ட அப்பணத்தைத் திருப்பிபெற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இத்தகைய விடயங்களில் சகல சங்கங்களின் செயற்பாடுகளையும் ஐக்கிய சீவல் தொழிலாளர் சங்கம் மிக உன்னிப்பாக அவதானித்து வருகிறது. அதே வேளை, சங்கங்களின் இணைந்த சக்தியாக உள்ள சமாசத்தின் கடந்த நிர்வாக காலத்தில் பெருமளவில் ஊழல் நிகழ்ந்துள்ளது உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்றது இந்த ஊழல்களின் விளை நிலங்களாக தெங்கு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் அமைந்துள்ளன.

கூட்டுறவு திணைக்கள உத்தியோகத்தர்கள் இத்தகைய ஊழல்களில் ஈடுபடும் சங்க பிரமுகர்களின் நடவடிக்கைகளை தெரிந்தும் தெரியாதவர் போல் இருப்பதினால், சங்கங்களையும் அதைச்சார்ந்து வாழுகின்ற ஆயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்களையும் மட்டம் தட்ட முனையும் நடவடிக்கைகளையும் வடக்கு கிழக்கு மாகாண அரசின்கவனத்திற்கு கொண்டுவர உள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### சிவகுரு கந்தையா நல்லம்மா

எங்கள் அன்புத்
தெய்வமே!
நீங்கள் எம்மை
விட்டுப் பிரிந்து
3 ஆண்டு சென்றாலும்
உங்கள் நினைவு
எமை விட்டு
என்றும் நீங்காது
உங்கள் ஆத்மா சாந்தி
அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

த. பூபாலசிங்கம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

[இ-8663]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி





| கந்தசாமி மகேந்திரராசா | கந்தசாமி வேலும்மயிலும் |
| --- | --- |
| நியாய மலர்வு: 1940 - 05 - 16 | நியாய மலர்வு: 1946 - 05 - 20 |

அநியாய உதிர்வு: 1989 — 08 — 02

1989 - 08 - 02 இல் வல்வெட்டித்துறையில் அநியாயமாக உதிர்ந்து விட்ட மலர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

1989 - 09 - 15 வெள்ளிக்கிழமை காலையில் வீட்டில் நடைபெறும் இருவரினதும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மனைவிமார், மக்கள்,
தாய், உறவினர்கள்.

திருவில்:
வல்வெட்டித்துறை.

[2325]

## Ist Year Remembrance



In Treasured Memory of

### Shirley Jeyaruban Lawrence

"I cannot say, and I will not say
That he is dead - He is just away"

Born: 05 - 09 - 1966 Died: 14 - 09 - 1988

Fallen tears and heartache,
Are things we have to bear;
Losing you the way we did
Always seems unfair.

You had a smile for everyone
You had a heart of gold.
You left the sweetest memories
That we could ever hold.

Fondly remembered by your eversorrowing
Dadda, Mummy, Shereen, Maureen,
Morley, Dalreen, Friends and loved ones.

Nagalingam Terrace,
Manipay.

[3091]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தொலைத் தொடர்பு நிலையத்திற்கு (TELE - Communication SERVICE) மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுடைய இயக்குனர்கள் தேவை; இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்;

No. 604
C/O உதயன்,
யாழ்ப்பாணம்;

(சி/3672)



## JAFFNA COLLEGE
VADDUKODDAI

**LONDON A E B (Advanced Level)**
**&**
**LONDON G C S E (Ordinary Level)**

Classes Commence on 18 - 09 - 1989
Hostel Accomodation Available
Students willbe selected on the basis of an admission Test in the English medium on very simple questions on their subjects;

PRINCIPAL.
**VADDUKODDAI.**

[C-3339]



## VACANCIES

Applications are invited from suitably qualified persons for the posts of Secretary to be engaged on contract basis by a Firm of Consultants in their offices in the Northern & Eastern Provinces;

**(i) Educational Qualifications:**

SSC/GCE (O/L) in 6 subjects in not more than two sittings with a credit pass in English.

**(ii) Experience**

12 Years experience as a Steno-Typist.
Speed - English Shorthand — 90 wpm
English Typing — 45 wpm

**(iii) Other Requirements:**

Knowledge of office correspondence, filing systems, drafting letters, covering conferences, to converse fluently in English and in administrative matters; Ability to operate Computer cum Word Processor will be an added qualification;

Applicants should send complete Bio-data with copies of testimonials (not originals) to reach on or before 27-09-89; No; 603, C/o, 'UTHAYAN';
(C 3671)



பெண்களுக்கான 10 சலுகைப் பரிசுகள் கொண்ட

## 122 ஆவது, 123 ஆவது
## தென் இந்திய யாத்திரைகள்

23-11-89 புட்டப்பர்த்தியில் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களின் பிறந்தநாள் (BIRTH DAY) விழாவில் கலந்து கொள்ளும் யாத்திரை

ஆரம்பம்: 12-11-89 முடிவு: 1-12-89

10-01 1990 சிதம்பரம் நடராஜப் பெருமான் ஆலயத்தில் மார்கழிமாத திருவாதிரை ஆருத்ரா தரிசனத்திற்கான யாத்திரை

ஆரம்பம்: 24-12-89 முடிவு: 12 01 1990

யாத்திரைக் கட்டணம் (ஒவ்வொன்றுக்கும் தலா) ரூபா 4900/- (இக் கட்டணம் இந்தியாவில் பிரயாணம் செய்வதற்கும் அறைகளில் தங்குவதற்கும் மட்டும்; இதர செலவுகள் தனி)

## விநாயகர் டூர்ஸ் & சங்கர்ஸ் போட்ஸ்

(அரசாங்கப் பதிவு பெற்றது 7753)
நாகப்ஸ் தியேட்டர் காம்பிளக்ஸ்,
**சுன்னாகம்.**

**சலுகைப் பரிசு விபரங்கள்,**
மேற்படி யாத்திரைகளில்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசாக ரூபா 4000/- 6ம் | |
| 2 ஆம் பரிசாக ரூபா 3000/- 7ம் | பரிசுகளாக |
| 3 ஆம் பரிசாக ரூபா 1500/- 8ம் | ஒவ்வொருவருக்கும் |
| 4 ஆம் பரிசாக ரூபா 1000/. 9ம் | தலா ரூபா 500/- |
| 5 ஆம் பரிசாக ரூபா 750/-10ம் | |

யாத்திரைக் கட்டணத்திலிருந்து சலுகை அளிக்கப்படும்; யாத்திரை புறப்படுவதற்கு 20 நாட்களுக்கு முன்பு பரிசுக் குலுக்கல் நடைபெறும்; முற்பணம் செலுத்தி முதலில் பதிவு செய்யும் 50 அன்பர்களுக்கு மாத்திரம் இடமுண்டு.

மேலும் விபரங்களுக்கு சுன்னாகம் நாகப்ஸ் தியேட்டரில் அமைந்துள்ள எமது ஆபீசுக்கு நேரில் வருகை தந்து தெரிந்து கொள்ளுங்கள்;

இராஜ நாயகி தியேட்டர், காங்கேசன்துறை: அ. வி. அருணாசலம் (அதிபர்)

(2334)


சரித்திரப் புகழ் வாய்ந்த

# பாப்பரசர் - கோர்பச்சேவ் சந்திப்பு
# மாஸ்கோவில் வருகிற நவம்பரில்

ரோம், செப். 13
பரிசுத்த பாப்பரசர் வருகிற நவம்பர் மாதம் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்ய இருக்கிறார்.

அப்போது ஜனாதிபதி கோர்பச்சேவ்-பாப்பரசர் சந்திப்பு இடம்பெறும் என்று ரோமில் உள்ள சோவியத்தூதர் நிக்கொலாய் லுன்கோவ் சொன்னார்.

பாப்பரசர் ஒருவரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தப் போகும் முதலாவது கிரெம்ளின் தலைவராக திரு. கோர்பச்சேவ் இருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாஸ்கோ செல்லவிருக்கும் பாப்பரசர், அங்கு கிறிஸ்தவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு விஜயம் செய்யத் தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி கோர்பச்சேவ் பதில் விஜயம் ஒன்றை வத்திக்கானுக்கு நவம்பரில் மேற்கொள்வார் என்றும் சோவியத்தூதர் நிக்கொலாய் லுன்கோவ் சொன்னார்.

இத்தாலி வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் சோவியத் தூதர் நிக்கொலாய் லுன்கோவ்,

"ஆண்டு முடிவதற்குள் அமெரிக்க அதிபர் புஷ்ஷை திரு. கோர்பச்சேவ் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்த இருக்கிறார்" — என்று சொன்னார். (எ)

## சுட்டுக்கொலை

வின்ரொக், செப். 13
நமீபியாவின் சுவாப்போ இயக்கத்தின் வெள்ளை இனத்தவரான மூத்த தலைவர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். (எ)

## இரண்டாவது விண்கலத்தை இஸ்ரவேல் அனுப்பவுள்ளது!

ஜெருசலம், செப். 13
இரண்டாவது விண்கப்பல் ஒன்றை இஸ்ரவேல் விண்வெளிக்கு அனுப்ப உள்ளது;

அது உளவுபார்க்கும் கப்பலாக இருக்காது என்று இஸ்ரவேல் விண்வெளி விஞ்ஞானி ஒருவர் தெரிவித்தார்;

வான வெளிக்கு முதன்முதலில் விண்கப்பல் ஒன்றை அனுப்பிய முதலாவது மத்திய கிழக்கு நாடு இஸ்ரவேல் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இன்னும் சில வருடங்களில் தொலைத் தொடர்பு செய்மதி ஒன்றை வானவெளிக்கு இஸ்ரவேல் அனுப்ப உள்ளது.

இதனிடையில் - அரபு நாடுகளின் இராணுவ நடவடிக்கைகளை உளவு பார்க்க இராணுவ உளவுச் செய்மதி ஒன்றை இஸ்ரவேல் அனுப்ப திட்டமிட்டிருப்பதாக பிரிட்டிஷ் பத்திரிகை செய்தி ஒன்றை பிரசுரித்துள்ளது; (எ)

## கறுப்பரான மேயர்

நியூயோர்க், செப். 13
நியூயோர்க் நகர மேயராக முதல்தடவையாகக் கறுப்பு இனத்தவரான திரு. டானியல் என்பவர் தெரிவு செய்யப்பட்டார்; (எ)

## சவுதி - ஈரான் ராஜீய உறவுகள்

பஹ்ரான், செப். 13
சவுதி அரேபியாவுடன் நல்லுறவு வைத்துக்கொள்ள ஈரானின் புதிய தலைமைபீடம் விரும்புவதாக அறிவிக்கப்படுகிறது.

ஏனைய வளைகுடா நாடுகளுடன் நல்லுறவு வைத்துக் கொள்வதில் ஈடுபாடு காட்டி வரும் ஈரான், சவூதியுடன் தொடர்பு வைப்பதில் தயக்கம் காட்டியே வந்தது.

இரு நாடுகளுக்கு இடையேயும் மத்தியஸ்தம் செய்து வைக்கத் தயாராக இருப்பதாக ஓமான் அறிவித்துள்ளது; (எ)

## சென்னை தூரதர்ஷன் முன்னால் அமைச்சர் உண்ணாவிரதம்

சென்னை செப் 13
சென்னையில் உள்ள தூரதர்ஷன் நிலையத்தின் முன்னால் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக தமிழக உணவுத்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி அறிவித்திருக்கிறார்.

அரிசி ஒதுக்கிடும் விஷயத்தில் மத்திய அரசு காட்டும் புறக்கணிப்பை பகிரங்கப்படுத்தும் முகமாக இந்த உண்ணாவிரதம் நடத்தப்படும் என்று அமைச்சர் அறிவித்தார்.

வள்ளுவர் கோட்டத்தில் ஞாயிறு நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் இதனை அறிவித்ததுடன் உண்ணாவிரதமிருக்க கூட்டத்திற்கு தலைமை வகித்த முதலமைச்சர் கருணாநிதியிடம் அனுமதியும் கேட்டார்;

கருணாநிதி புன்சிரிப்பை உதிர்த்தார்; (எ)

## நேபாளத்தில் பலர் கைது

காத்மண்டு, செப் 13
நேபாளத்தில் சுமார் ஆயிரத்து 500 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்;

தடைசெய்யப்பட்ட நேபாளி காங்கிரஸின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதைத் தடுக்கும்முகமாகவே காங்கிரஸ் தீவிர உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டனர். (எ)

## நேபாள நெருக்கடியினால் இந்திய கால நிலை பாதிப்பு!
### மன்னர் பிரேந்திரா எச்சரிக்கை

காத்மாண்டு, செப் 13
நேபாளம் மீது இந்தியா விதித்துள்ள பொருளாதார நெருக்கடி இந்தியாவுக்கே தீமையாக முடியப் போகிறது என்று மன்னர் பிரேந்திரா எச்சரித்துள்ளார்.

இந்தியாவுடனான 6 மாத கால நெருக்கடி குறித்து நேபாள மன்னர் பிரேந்திரா முதன்முறையாக பின்லாந்து பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி அளித்தார்;

எரிபொருள் நேபாளம் வருவதற்கான பாதைகளை இந்தியா மூடிவிட்டது;

இதனால் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது; நேபாளிகள் காடுகளில் மரங்களை வெட்டி எரிபொருளாகப் பயன்படுத்துகின்றார்கள்.

நேபாளிகளின் இச்செயலால் இமயமலை அடிவாரத்தில் உள்ள காடுகள் அழிந்து வருகின்றன

இது இந்தியாவின் கால நிலையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது. வெள்ளமும் வரட்சியும் இந்தியாவைப் பாதிக்கும்.

தற்சமயம் பின்லாந்தில் ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டுள்ள நேபாள மன்னர் முன்கண்டவாறு பத்திரிகைப் பேட்டியில் தெரிவித்தார்; (எ)

## இஸ்ரவேல் உத்தரவு

ஜெருசலம், செப். 13
தாயகம் மீட்கும் கிளர்ச்சி நடத்தும் பலஸ்தீனியர் மீது பலாத்காரம் பாவிப்பதைக் குறைத்துக் கொள்ளும்படி இஸ்ரவேல் ராணுவத்தின் புதிய தளபதி தனது வீரர்களுக்கு எழுத்து மூலம் உத்தரவிட்டிருக்கிறார்; (எ)

## 'பிரித்வி'யின் 2ஆவது சோதனை ஸ்ரீஹரிகோட்டாவில் இவ்வாரம்

சென்னை, செப் 13
ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து 'பிரித்வி' ஏவுகணை இரண்டாவது தடவையாக பரீட்சித்துப் பார்க்கப்பட உள்ளது;

இன்னும் ஒரு வார காலத்தில் இப்பரிசோதனை நடத்தப்படும் என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன;

"பிரித்வி" ஏவுகணையின் முதலாவது பரிசோதனை கடந்த ஆண்டு பெப்ரவரி 25 ஆம் திகதி இடம்பெற்றது.

"பிரித்வி"-தரையில் இருந்து தரைக்கு பாயும் ஏவுகணை ஆகும்; 250 கிலோ மீற்றர் தூரம் பாய்ந்து சென்று தாக்கு வல்லமை பெற்றது;

இரண்டாவது பரிசோதனைக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கு ஏவுகணைத் தயாரிப்புத்திட்ட இயக்குநர் ஜனாப். ஏ. பி. ஜே. அப்துல் கலாம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத் தலைவர் டாக்டர் யு. ஆர். ராவ் ஆகியோர் ஸ்ரீஹரிகோட்டாவுக்கு விஜயம் செய்தனர். (எ)

## பங்களாதேஷில் புதிய அரசியல் கட்சி

டாக்கா, செப். 13
பங்களாதேஷில் புதிய அரசியல் கட்சி ஒன்று அமைக்கப்பட்டது;

கடந்த ஆண்டு மார்ச்சில் ஜெனரல் எர்ஷாத் அமைச்சரவையில் இருந்து ராஜினாமாச் செய்த இருவர் [illegible] தேசிய [illegible] கட்சி என்ற [illegible] தொடங்கி உள்ளனர்; (எ)

## ஓஸோன் படல ஓட்டை பயிர்களையும் பாதிக்கும்!

வாஷிங்டன், செப். 13
பூமியை, சூரியக்கதிர்களின் நேரடித் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கும் ஓஸோன் படலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டை காரணமாக பயிர்வகைகளுக்குத் தேவையான முக்கிய புரோட்டீன் சத்து ஒன்று அழிந்துபோகும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று அமெரிக்கத் தாவரவியல் நிபுணர் டாக்டர் ஒடர் தேர் மற்றோர் எச்சரித்துள்ளார்;

இக்கதிர்த் தாக்கத்தினால் மனிதர்களுக்கு தோல் புற்று நோய் வரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது;

அதுபோல பயிர்கள் சேமித்து வைக்கும் போட்டோசிந்தஸிஸ் [illegible] [illegible] நேரடியாக வரும் அல்ரா வயலற் கதிர்கள் ஒவ்வொரு அரைமணித்தியாலமும் அழித்துக் கொண்டே இருக்கும்.

இதனால் சத்துள்ள மரக்கறி உணவுகள் மனிதருக்குக் கிடைப்பது குறைந்து விடும்

இப்படி திரு. மற்றோர் மேலும் தெரிவித்தார் (எ)

## முறியடிப்பு

புதுடில்லி, செப். 13
1988 ஆம் ஆண்டில் முதல் எட்டு மாதங்களில் 10கோடி ரூபா பெறுமதியான தங்கம், வெள்ளி மற்றும் ஹெரோயின் போதை வஸ்து ஆகியன பம்பாய்த்துறைமுகம் ஊடாக கடத்துவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. (எ)

## கோர்பச்சேவ் எதிர்ப்பாளர் புஷ்ஷுடன் பேச்சு வார்த்தை

மாஸ்கோவில் ஜனாதிபதி கோர்பச்சேவின் அரசியல் எதிர்ப்பாளராக உள்ள ரஷ்ய எம்பி போரிஸ் யெல்சின் நேற்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்தித்தார்;

கோர்பச்சேவின் அரசியல் சீர்திருத்தத்தைத் தான் ஆதரிப்பதாக அப்போது புஷ்ஷிடம் சொன்னார்.

அமெரிக்காவில் ஐந்து நாள் விஜயத்தை ஆரம்பிக்கும் முன்னர் திரு. யெல்சின் டெலிவிஷன் பேட்டி ஒன்றில்,

'கோர்பச்சேவின் செல்வாக்கு குறைந்து வந்தாலும் அவரது பதவிக்கு தற்போதைக்கு ஆபத்து இல்லை' — என்று சொன்னார். (எ)


## JAFFNA COLLEGE
VADDUKODDAI

## YEAR ONE ADMISSION

Closing Date of Application - 30 - 09 - 1989
Date of Selection - 07 - 10 1989

**PRINCIPAL**

[C-3340]


சிங்கள தேர்ச்சியின்மையால் வேலை இழந்த நெசவு ஆசிரியர்களின்

## பொதுக்கூட்டம்

இடம்:- நெசவு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை நல்லூர்.
காலம்:- ஞாயிறு (17-9-89) காலை 9 மணி
வேலையிழந்தோர் தவறாது சமுகந்தரவும்.

நெசவு ஆசிரியர்,
பயிற்சிக்கலாசாலை,
நல்லூர்;

R. முத்தையா
அழைப்பாளர்.

(2158)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### இராமலிங்கம் நாகம்மா

மறைவு: 8 - 9 - 84
திதி: 14 - 9 - 89

ஞான தீபமாய் விளங்கி எம் இதயங்களில் அன்பான தீபமாய் ஆகிவிட்ட எமது குடும்பத் தலைவிக்கு எமது கண்ணீர்ப் பூக்களை தங்கள் காலடியில் சமர்ப்பித்து தங்களுக்கு எமது 5 ஆவது வருட நினைவஞ்சலியை செலுத்துகின்றோம்;

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.

"கலாபவனம்"
4 ஆம் வட்டாரம், புங்குடுதீவு;

(2339)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 06 - 09 - 1969

மறைவு: 02 - 08 - 1989

செல்வன்
### பாலகிருஷ்ணன் பிரேமதாஸ்
[சின்னராசா]
(Ey 5872 கார் உரிமையாளன்)

பாச மகனே!, சகோதரனே!, மைத்துனனே! மாமா என்று அழைக்கும் போதெல்லாம் உங்களைக் காணவில்லையே!

எம்மையெல்லாம் ஏற்றமுடன் வாழவைக்கவென்று பிரியமுடன் உழைத்து வந்தீர்; அப்படியே அன்றும் உழைக்கவென்று சென்ற நீர் மீண்டும் திரும்பாத இடம் சென்றதேனோ??

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
ஐயா, அம்மா, அம்மாச்சி, சகோதரன், சகோதரிகள், மைத்துனர், மைத்துனி, மருமக்கள்;

வைகுண்டம் ஒழுங்கை,
திருவில்
வல்வெட்டித்துறை;

(2341)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நாவலர் சித்தங்கேணி

91 A/L கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பமாகிவிட்டன.
எமது ஆசிரியர்குழு:
திரு. கலாகரன், திரு. தேவா
திரு. கேசவன், திரு சிறீகாந்தன்
திரு இராஜேந்திரா,
அருள்நங்கை


# உதயன்

14 ௯ 1989 வியாழக்கிழமை

நாவலர் - சித்தங்கேணி

O/L DAY CLASS
(பகல் நேர வகுப்புக்கள்)
காலை 8 மணி முதல் பி. ப. 1 மணிவரை
கணிதம் — திரு. U. குணம்
விஞ்ஞானம் — திரு. J. R சூரி
ஏனைய சகல பாடங்களும்
நடைபெறுகின்றன.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



பிறப்பு: 27-08-1917 — இறப்பு: 15-08 1989

யாழ் மண்டை தீவு வாசியும் சைவ வேளாளர் குல திலகரும் பண்புடைய செம்மலுமான

### உயர்திரு வேலுப்பிள்ளை கந்தையா

எங்கள் இதயத்தில் என்றும் நீங்காது நிலைத்து நிற்கும் அன்புத் தந்தையே! எமக்கு நல் வழி காட்டி அன்பு அறநெறி பண்பு பாசத்துடன் எம்மை வளர்த்த தெய்வமே! எங்களை கண்ணீர்க் கடலில் ஆழ்த்திவிட்டு இறைவனோடு இறைவனாக இணைந்து விட்டீர்கள்; உங்கள் நினைவால் வாடுகின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவனின் அமரத்துவ தினத்தில் பங்கு கொண்டோர், ஆழ்ந்த துயரத்தோடு அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், உள்ளன்போடு உதவி ஒத்தாசைகள் புரிந்து பாடுபட்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தகவல்:
க. வைபோகராஜா

"வைகுந்தம்"
7-ம் வட்டாரம்,
மண்டைதீவு.

(1945)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பூபாலசிங்கம் நாகரத்தினம்

திருமதி பூபாலசிங்கம் நாகரத்தினம் 13 - 09 - 89 இல் காலமாகிவிட்டார்.

இவர் திரு: இராசையா பூபாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், கருணாநாதன், நிர்மலநாதன் (சின்ராசா), சண்முகநாதன் (குஞ்சு, டென்மார்க்), கிருஷ்ணானந்தன் (சின்னவன், டென்மார்க்), ரகுநாதன் (முருகன், ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், வடிவாம்பாள் (டென்மார்க்), தங்கராணி, ரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், லக்ஷ்மி (டென்மார்க்), ரெஜினா ஆகியோரின் பேத்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சின்னராசா.
(மகன்)

48/5, கிரான்வி ரோட்,
யாழ்ப்பாணம்.

(2159)

### திருமதி சிவக்கொழுந்து அம்பலவாணர்

உரும்பராய் தெற்கைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து அம்பலவாணர் 13 - 09 - 89 இல் இயற்கை அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா அம்பலவாணரின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, சரஸ்வதி, பாலசிங்கம் (Indian Overseas Bank), விக்னேஸ்வரன் (U M A. Transport) ஆகியோரின் அருமைத் தாயாரும், சுப்பிரமணியம், காலஞ்சென்ற நவரத்தினம், சிவபாக்கியம், லவபூஷணம் ஆகியோரின் அன்பு மாமியாரும், மனோகரபூபன் (Manoharan and Vettivel), மோகனா, மகேந்திரராஜா, சிவமலர், கருணாதேவி, சுந்தரமூர்த்தி, வெற்றிவேலு, சிவராஜா, சுதா, ராதா, சுதா, அருணன், நிமலன், ரேணுகா, உமா, பாமா, ரமா ஆகியோரின் அன்புப் பேத்தியும், மோகன், வீணா, கிருஷ்ணவேணி, ஜெயன், மகிந்தன், ஷர்மினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-09-89 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைகள் வேம்பன் மயானத்தில நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. விக்னேஸ்வரன்.

உரும்பராய் தெற்கு,
உரும்பிராய்.

(1947)

**நாட்டில்..**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக தேசிய ஒருமைப்பாடு உருவாகி இருக்கிறது:

ஜனநாயக நடைமுறைக்கு வெளியே உள்ள சக்திகளை அரசியல் நீரோட்டத்திற்குக் கொண்டு வருதல், வன்முறைகளை ஒழித்தல், சமாதானத்தையும் சகஜ நிலையையும் மீண்டும் ஏற்படுத்துதல், அரசியல்-பொருளாதார நிர்வாக முறைகளை மறுசீரமைத்தல், வர்த்தக, சமூக அல்லது இன பேதமின்றி சகல மக்களுக்கும் சம உரிமைகளை உறுதிப்படுத்தல், சமூக - பொருளாதார ஏற்றத்தாழ்வை ஒழித்தல் ஆகியன இவற்றுள் அடங்குகின்றன என்றார்:

**அனைத்து..**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும்:

கலந்துரையாடலைத் தொடர்ந்து மீண்டும் அக்டோபர் 12ஆம் திகதி சர்வகட்சி மாநாடு கூட்டப்படும்.

நேற்றைய மாநாட்டில் ஈ. என். டி. எல். எப். தமிழரசுக் கட்சி ஜே. வி. பி, தேச விமுக்தி பெரமுனை, நவசமசமாஜ கட்சி, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகிய ஆறு கட்சிகளும் பங்குபற்றவில்லை. (உ-எ)

**தெற்கில்.**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரமசிங்காவின் வாசஸ்தலம் செவ்வாய்க்கிழமை அதிகாலை தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்கானது

★ எரியுண்ட நிலையில் 16 சடலங்கள் நேற்று முன்தினம் ஜா-எலையில் கண்டுபிடிக்கப் பட்டன.

★ கண்டி, ரயில் பாதையில் 15 சடலங்கள் அரைகுறையாக எரிந்த நிலையில் கிடந்தன.

★ காலியில் அரச பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த சுப்ரின்டென்ட் எஸ். திசநாயக்கா நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார். (உ-எ)

**பாடசாலை..**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விடுவிக்கப்படுவர்.

★ இக்கூட்டத்தில் கலந்து கொண்ட மூன்று இயக்கங்கள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களினால் கட்டாயத்தின் பேரில் கொண்டுசெல்லப்பட்ட 138 மாணவர்களும் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

— இவையே அத்தீர்மானங்கள் ஆகும்.

கூட்டத்தின் இறுதியில் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் கையெழுத்திட்ட கோரிக்கையொன்றும் வெளியிடப்பட்டது.

பிரஸ்தாப விடயங்களைக் கருத்தில் கொண்டு பாடசாலை செல்லாத மாணவர்களை உடனடியாகப் பாடசாலைக்குச் செல்லும்படியும், பெற்றோர் அவர்களைத் தயக்கமின்றிப் பாடசாலைக்கு அனுப்பிவைக்கும்படியும் அந்தக் கோரிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. (உ. 9)

எமது புதிய வெளியீடுகள்:

(1) ராமராஜன், கௌதமி, கவுண்டமணி, செந்தில் நடித்த
★ ராஜா ராஜாதான் (ஒறிஜினல்)

(2) ஜனகராஜ், S. V. சேகர், S S சந்திரன் நடித்த
★ மணந்தால் மகாதேவன் (ஒறிஜினல்)

(3) அர்ஜுன், ஷோபனா நடித்த
★ ஒரேவாரிசு (ஒறிஜினல்)

வீடியோ விமல்
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (1948)

## பருத்தித்துறை வங்கியில் 4 தினங்கள் கொடுப்பனவு

இடம்பெயர்ந்தோருக்கான ஆயிரம் ரூபா நிவாரணத்தை இதுவரை பெறாதவர்களுக்கு பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளை 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 18ஆம் திகதி திங்கட்கிழமை வரை கொடுப்பனவுகளை வழங்க உள்ளது:

கொடுப்பனவு செய்யப்படவுள்ள கிராமசேவகர் பிரிவுகளும் குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:-

15 9-1989 வெள்ளிக்கிழமை:

| | |
|---|---|
| துன்னாலை வடக்கு | — 262 |
| பருத்தித்துறை | — 141 |
| வியாபாரிமூலை | — 47 |
| வல்வெட்டித்துறை வ | — 75 |
| வல்வெட்டித்துறை தெ. | — 55 |

16 9 1989 சனிக்கிழமை:

| | |
|---|---|
| நாகர்கோவில் வடக்கு | — 314 |
| நாகர்கோவில் தெற்கு | — 179 |
| பருத்தித்துறை கிழக்கு | — 136 |
| தம்பசை | — 122 |
| புலோலி மேற்கு | — 99 |
| புலோலி கிழக்கு | — 65 |
| தொண்டமானாறு | — 24 |
| கற்கோவளம் | — 12 |
| கெருடாவில் வடக்கு | — 6 |
| கெருடாவில் தெற்கு | — 6 |

17-9-1989 ஞாயிற்றுக்கிழமை:

| | |
|---|---|
| மருதங்கேணி கரையூர் | — 572 |
| குடத்தனை கரையூர் | — 108 |
| முள்ளியான் | — 52 |
| அம்பன் | — 51 |
| மருதங்கேணி தாளை | — 10 |
| செம்பியன்பற்று | — 6 |
| கண்டிக்குளம் | — 05 |

18 9-1989 திங்கட்கிழமை: பட்டியலில் பெயர் இருந்தும் பல்வேறு காரணங்களினால் இக்கொடுப்பனவு பெறாதவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும். (இ-118)

## வல்வையில் நிவாரணம்

வல்வெட்டித்துறை, செப். 14

கடந்த மாதம் வல்வெட்டித்துறைப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது உயிரிழந்த அல்லது காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு இன்று வியாழக்கிழமை நிவாரணப் பணம் வழங்கப்படவிருக்கிறது.

ஒவ்வொருவரினதும் குடும்பங்களுக்கு ஐநூறு ரூபா என்ற அடிப்படையில் இந்த நிவாரணத்தை யாழ் கியூ டெக் நிறுவனம் கொடுத்து உதவுகிறது.

இன்று காலை 9 மணிக்கு வல்வை புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஆலய பங்குத் தந்தை ஜெறோ செல்வநாயகம் இந்த நிவாரணத்தை பாதிப்புற்றோரின் குடும்பத்தவருக்கு வழங்குவார்.

இதேவேளை மேற்படி அசம்பாவிதங்களில் பாதிப்புற்றோரின் குடும்பங்களுக்கு யாழ். எவ். ஆர். எல். நிறுவனம் இன்று வல்வை கல்வி மன்றத்தில் வைத்து பாத்திரங்களை வழங்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-160)

## மாநாட்டில் பங்கு பற்றிய..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூரியபெருமா, அனுருத்த ரத்வத்த, மங்கள முனசிங்க.

★ ம. ஐ. மு:- தினேஷ் குணவர்த்தன, கே. அந்தனி பெரேரா, டாக்டர் டி. ஏ. ரணதுங்கல.

★ அகில இலங்கை முஸ்லிம் லீக்:- டாக்டர் எம். ஸி எம். கலீல், எம். எம். எம். ஹஸீம், எச். எம். அமீத்.

★ ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்):- டி. சித்தார்த்தன், வி. கந்தசாமி, ரி. கனகலிங்கம்.

தமிழீழ விடுதலை இயக்கம்:- என். ஸ்ரீகாந்தா, எல். கேசு சிவாஜிலிங்கம், ஜி கருணாகரன்.

இலங்கை கம்யூ. கட்சி: 3 பி டி சில்வா, பீற்றர் கெனமன், எஸ் சுபசிங்க.

ல ச ச கட்சி: பேர்னட் சொய்சா, டாக்டர் ஒஸ்மன் ஜெயரத்தின, விமல் விக்ரம.

இ தொ கா: எம் எஸ் செல்லச்சாமி, வி அண்ணாமலை, பி பி தேவராஜன்.

லிபரல் கட்சி: சானக அமரதுங்க, அஜித பெரேரா, காமினி குணவர்த்தன

ஈ எல் ஜே பி ருக்மன் சேனநாயக்கா, டாக்டர் காமினி விஜேசேகர, ஜே பி விமலசிங்க.

★ ஈ பி ஆர் எல் எவ்: கே பிரேமச்சந்திரன், எல் கேதீஸ்வரன்.

★ ஈழவர் ஜனநாயக முன்னணி: வி பாலகுமாரன், எஸ். இரத்தினராசா, எஸ் பஹீர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்: வி ஸி மோதிலால் நேரு, ஏ விநாயகமூர்த்தி, ரி சுந்தரலிங்கம்.

★ தமிழர் விடுதலைக் கூட்டணி: மாவை சேனாதிராசா, எஸ் எம் ஜி நாதன்.

★ தமிழீழ விடுதலைப் புலிகள்: யோகி, லோறன்ஸ் திலகர், லதித்.

ஐக்கிய சோசலிஸ அணி:- ராஜா பொன்னுசே, அத்தாவுட செனிவிரத்தின,

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்:- ஏ. அஸீஸ், வி. பி. கணேசன், அஷ்ரப் அஸீஸ்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்:- எம். எச். எம். அஷ்ரப், எம். எச். சேகு இஸ்ஸதீன், ஏ. ஆர். அப்துல் ஹாஜ் அப்துல் ரஹ்மான், எம். எம். புஹாரி,

இலங்கை முன்னேற்ற முன்னணி:- எஸ் டி பண்டாரநாயக்கா, ஆர். வி. குணதிலக, ஆஸாத சில்வா, சிரிசேன ராஜபக்ஸ, வி. பிரதும்ம.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி: ஒஸி அபேகுணசேகரா, வைத்ய பி. டி. சில்வா, காமினி குணவர்த்தன.

அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் டி பி விஜேதுங்க, சபாநாயகம், எம். எச். முகம்மது, அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பங்குபற்றினர். (உ-எ)

**உணவு முத்திரை..**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதுவரை இடைநிறுத்தி வைக்கப்படும் உணவு முத்திரை விநியோகத்தை பின்னர் வழங்குவதற்கு அனுமதி பெற்றுத் தரும்படியும், கூட்டுறவுச் சங்கங்களின் அதிகாரிகள் சிலர் யாழ்-செயலக அதிகாரிகளைக் கோரியுள்ளனர். (உ-9)

**ஐ. நா..**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்கொடுப்பது பற்றியும்— 1989இல் மேலும் 2 ஆயிரம் மாணவர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சி அளிப்பது பற்றியும் ஆராயப்பட்டது. (உ-9)

## மரண அறிவித்தல்கள்

### திரு. கதிரவேலு சபாபதி

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கதிரவேலு சபாபதி 13-09-89 இல் சிவபதமடைந்துவிட்டார்:

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும், சிவசுப்பிரமணியம் [நைஜீரியா], தவமணி (சிங்கப்பூர்), தனலட்சுமி சிவபாதசுந்தரம் (இத்தாலி) செல்வமணி ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகநாதன் (இளைப்பாறிய கிதர்), மகாலிங்கம் [தே. வ: கூ. ஆலைபிறவு), ஜெயராஜா (பிள்ளையார் விலாஸ்,) லட்சுமிப்பிள்ளை, கமலாம்பிகையின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை 11-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்: இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

(2344)

### திருமதி பிலிப்புப்பிள்ளை ஞானப்மா

திருமதி பிலிப்புப்பிள்ளை ஞானம்மா அவர்கள் 11-9-89 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற பிலிப்புப் பிள்ளையின் அன்பு மனைவியும், ஆரோக்கியநாதர் (ஞானராசா), திரேசா (பேபி) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், காலஞ்சென்ற அருளப்பு, திருமதி அன்னம்மா (அன்னமுத்து) அவர்களின் அன்புச் சகோதரியும், வவுனியா ஜோனியன் கபே உரிமையாளர் J L சவுந்தரநாயகம், கமலராணி ஆகியோரின் மாமியாரும், ஜோனிவ்ரன், ஜொனிஸ்ரா, சஜ், பொபி, சரு, கமலி, கமல்ருஜ், ஞாலினி ஆகியோரின் பேத்தியுமாவர். அன்னாரின் பூதவுடல் 14 9 89 வியாழக்கிழமை மாலை 4 - 00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்,

10, அச்சக வீதி.
யாழ்ப்பாணம்.

(2161)

### சிவகுருநாதன் வாசுதேவன்

(வாசன்)

(முகாமையாளர், மம்மிடடி - சாவகச்சேரி)

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த சிவகுருநாதன் வாசுதேவன் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற சிவகுருநாதன் - தேசமலர் தம்பதிகளின் அன்பு மகனும், மோகனராஜன் (ஜேர்மனி), குகராஜன் (ஜேர்மனி), இந்துமதி, பூரணபதி, வசுமதி, மதனராஜன், சிவனேசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கருணாபதி (உரிமையாளர், மம்மிடடி - சாவகச்சேரி) அவர்களின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 14-09-1989 வியாழக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து சாவகச்சேரி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக்கொள்ளுமாறு அன்பாக வேண்டுகிறோம்.

தகவல்:
V. யோகநாதன்
(சிறிய தந்தை)

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(2346)

### திரு. தம்பு விவேகானந்தா

(கல்விக் கந்தோர், யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கண்டுக்குளியைச் சேர்ந்தவருமாகிய திரு: தம்பு விவேகானந்தா (குழந்தை) 13-9-89 அதிகாலை காலமானார்.

இவர் கமலநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி தம்பு - அன்னம்மா ஆகியோரின் இளைய மகனும், காலஞ்சென்ற தில்லையம்பலம், பவளம் ஆகியோரின் மருமகனும் இரசுகி, நிரஞ்சன், விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவபாக்கியவதி, சிவலட்சுமிதேவி, சிவசுப்பிரமணியம், சிவபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், குமாரவேல் (கல்விக் கந்தோர்), அருணாசலம், வள்ளிநாயகி, காந்திமதி, திருமதி செல்வரத்தினம் லோகநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 34/1, கொழும்புத்துறை வீதி, கண்டுக்குளியில் நடைபெற்று பூதவுடல் 14-9-89 வியாழக்கிழமை (இன்று) காலை 9 மணிக்கு தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பொ. பாலகிருஷ்ணன்
(Uthayan Printers)

28, கொழும்புத்துறை வீதி,
கண்டுக்குளி.

(சி/3675)

இப்பத்திரிகை திரு. உதயன் பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் நாவலர் வீதி 208/8 இலக்கத்தில் [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org